www.tamilarangam.net

Riya

# தூண்டில்





87 - RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE FRANCE







TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 33

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செயற்படுங்கள்

# சிந்தியுங்கள்

தமிழ் மக்கள் மீது இன்று சொல்லொணாத் துன்பங்களையும் அழிவுகளையும் கட்டவிழ்த்து, அதன் மீது தமிழீழத் தங்கக்கோபுரம் கட்டப் போவதாகக் கூறுகின்ற விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உண்மையான சொரூபத்தை இனங்கண்டுகொள்ளத் தவறிஅம் மாயைக்குள் தொடர்ந்தும் அமிழ்ந்து மேலோட்டமாகவும், கண்மூடித்தனமாகவும் இராணுவ நடவடிக்கைகளை மட்டும் கணிப்பிட்டுக்கொண்டிருப்போமாயின் எமது இனம் வாழ்வதற்குரிய எல்லா ஆற்றல்களையும் இழப்பது நிச்சயம்.

இன்று இளம் சந்ததியினர் பலர் நேர்மையுடன், தியாகத்துடன், தமிழ் மண் காப்போமென்ற உணர்வுடன், தமது உயிரைக் கொடுக்க முனைகின்றனர்.

ஆனால் உண்மையில் இவர்கள் எதற்காக? யாருக்காக? எந்தக் கொள்கைக்கா? தியாகம் செய்கிறார்கள்?.

இவர்கள் எமது விடுதலை போராட்டத்தில் வளர்ந்துவந்த ஓர் அழிவு அரசியலின் பகடைக் காய்களாக வீணே அழியப் போகிறார்களா?

ஆம்! ஓர் துப்பாக்கிக்காக பத்து இளைஞர்கள் உயிர் துறக்கின்றார்கள். ஆகவே ஓர் துப்பாக்கி பத்து உயிர்களின் பெறுமதி பெறுகிறது என்றுகூறும் அளவுக்குப் பித்துப் பிடித்துப் போயுள்ள ஓர் தலைமையின்கீழ் விடுதலை என்பது வரப் போவதில்லை.

துப்பாக்கிமுனையில் கருத்துச் சுதந்திரத்தை அடக்கி, நூற்றுக்கணக்கான போராளிகளை அழித்து, மக்களைச் சிந்திக்காது அல்லது சிந்திப்பவர்களை மௌனிகளாக்கிவிட்டு, இன்று மக்களின் முன்வந்து துப்பாக்கியை வணங்குவோம், பூஜிப்போம் என்று கூறுமளவிற்கு இவர்கள் நிலை தழும்பிவிட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அனைத்து வழிகளிலும் ஒடுக்குமுறைக்குள்ளாகியிருக்கும் குரல்களுக்கு களம் கொடுத்தும், அந்தக் குரல்களுடன் எங்களையும் சேர்த்துக்கொள்ளும் பொருட்டும் இலங்கையிலிருந்து கிடைக்கும் பிரசுரங்கள், கருத்துகளைப் பிரசுரித்து வருகின்றோம். இந்த ரீதியில் கலம் 30இல் 'பொய்மைக்குள் வாழ மறுப்போம்' என்ற பிரசுரத்தை பிரசுரித்திருந்தோம். அதே போல், அனுப்பியவர் முகவரியில்லாது இலங்கையிலிருந்து எமக்கு அனுப்பிவைக்கப்பட்ட இன்னுமோர் பிரசுரம் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

— கடலோடிகள்

---

இயக்கத்துக்குள்ளும், வெளியேயும் சுயமாகச் சிந்திக்க விடாது, கிட்லர் பாணியில் தலைமைவழிபாட்டை வளர்த்து, சுத்த இராணுவக் கண்ணோட்டத்தில் செயற்படும் இவர்கள், சுயமாக சிந்திப்பது பற்றிக் கூறுவது "சாத்தான் வேதம் ஓதுவதை ஒத்ததாகும்".

தமிழீழம் என்ற கோசம் இவர்கட்கு இயக்கத்துக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கும், அவர்களை உணர்ச்சியூட்டி தற்கொலைப் பாதையில் தள்ளுவதற்கும் தேவையானது. இன்று அழிவு வருகிறது எனக் கூறி சிறுவர்களையும், யுவதிகளையும் யுத்தத்தில் இறங்குமாறும் அழைக்கின்றனர்.

முடியுமானவரையில் எல்லோரையும் ஏதோ ஒரு விதத்தில் சிறிலங்கா இராணுவத்தின் முன் தள்ளிவிடுவதே இவர்களின் தந்திரோபாயமாகும்.

இந்த யுத்தத்தைத் தடுக்க எமக்கு வேறு வழிகள் இருக்கவில்லையா? கிழக்கு மாகாண மக்கள் பற்றி கரிசனையாகக் கதைப்பவர்கள், அவர்களின் பிரத்தியேகமான பிரச்சினைகளைக் கணக்கிலெடுத்து செயற்படுபவர்களாயின் –

1. இவ்வளவு மூர்க்கமாக இந்த யுத்தத்தை ஆரம்பித்திருப்பார்களா?

2. சரணடைந்த பொலிசாரைச் சுட்டுக்கொன்று இராணுவத்தினதும், காடைகளினதும் சீற்றத்தை சாதாரண மக்கள் மீது கட்டவிழ்த்து இருப்பார்களா?

3. அன்று மற்றைய இயக்கங்களை அழிக்க முயன்ற போது அதனை எதிர்த்த கிழக்கு மாகாணத் தலைமைகளை ஒதுக்கி, வடபகுதியிலிருந்து அழிப்பை நடத்த ஆட்களை அனுப்பியிருப்பார்களா?

4. மற்றைய இயக்க அழிப்பின்

www.tamilarangam.net

போது வடபகுதியில் கொல்லப்பட்ட இளைஞர்கள் அப்பாவி கிழக்கு மாகாண இளைஞர்களே.

5. ஏன் வடபகுதியில் யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை?

6. ஸ்தூலமான பிரச்சினைகளை கொண்ட முஸ்லீம் சமூகத்தின் பிரச்சினை மிகவும் கவனமாகவும், அவர்களின் உணர்வுகட்கு மதிப்புக் கொடுத்தும், கையாளப்படவேண்டியதொன்று. இவர்களது இறுமாப்புடனான செயல்முறை சிக்கலை மேலும் வளர்த்துள்ளது.

இவர்களின் தொடச்சியான ஐ.பி.கே.எவ் மீதான யுத்தம் கூட மிக மூர்க்கத்தனமான முறையில், மக்கள் நலனில் சிறிதும் அக்கறையில்லாத, வறட்சியடைந்த சிந்தனைத் தளத்திலிருந்து தொடக்கி வைத்ததாகும்.

தமிழ் மக்களை அழிவுப் பாதையில் இட்டுச் செல்லும் இவர்கள் – இன்று அரசின் இனப் படுகொலைகளைப் பற்றிக் கதைப்பவர்கள் – அன்று தலைநகரில் பல கொலைகளைச்செய்யும்போது பாதுகாப்பளித்தது இவ்வரசாங்கமே.

ஐம்பதாயிரத்திற்கும் கூடுதலான சிங்கள மக்களை இலங்கை இராணுவம் மூர்க்கத்தனமாகப் படுகொலை செய்தபோது இவர்கள் மௌனமாக இருந்தது மட்டுமன்றி, சர்வதேச அரங்குகளில் அரசிற்குச் சாதகமாக நிலைப்பாடு எடுத்தார்கள்.

அரச படையின் உதவியுடன் ரி.என்.ஏ.ஐ அழித்தவர்கள். பலவந்தமாக ஆட்சேர்ப்பில் இணைந்த பல இளைஞர்களை சரணடைந்த பின்னரும் கொன்று குவித்தார்கள்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமக்கிடையேயான பதவிப் போட்டியால் தொடர்ச்சியாகச் செய்த கொலைகள், ஈழம் எனக் கூறி உணர்ச்சியூட்டி சயனைட் அருந்திச் சாகடித்த நூற்றுக்கணக்கான இளைஞர்களின் அர்ப்பணங்கள் அனைத்தும் இவர்களை அழிவுக்கே இட்டுச் செல்லும்.

தமது அழிவின் ஒவ்வோர் கட்டத்திலும் தமது இருப்பைப் பாதுகாக்க மட்டும் சமாதானம், பேச்சுவார்த்தை என முன் வந்தாலும் மக்களுக்கு நிரந்தர சமாதானத்தையோ, பாதுகாப்பையோ இவர்களால் ஒருபோதும் பெற்றுக்கொடுக்க முடியாது. எனவே தாம் அழியும்முன் மக்களையும் அழிப்போம் என்னும் பாணியில் இவர்களின் செயற்பாடு இருக்கும்.

மக்கள் இன்று சிறீலங்கா அரசின் இனப்படுகொலைக்கும், புலிகளின் இனத் தற்கொலைக்கும் எதிராக நிலைப்பாடு எடுக்க வேண்டியவர்களாகிறார்கள்.

உண்மையில் இவர்கள் கூறுவதுபோல் இவர்களது போராட்டம் புனிதமானது, ஈழம் கிடைக்கும் என நம்புவோர் ஓரத்தில் நின்று கைதட்டாமல் இவர்களுடன் இணையுங்கள்.

வரலாறு தெரிந்தவர்கள் சிந்திக்கக் கூடியவர்கள், ஓவியங்களிலும், சிலைகளிலும் துப்பாக்கி வைத்து வணங்கும் இவர்களது அரசியல் வங்குரோத்தை இனங் கண்டுகொள்பவர்கள் உண்மையில் எமது எதிர்கால சந்ததியின் நன்மைக்காகக் குரல் கொடுங்கள்.

அப்பாவிச் சிறுவர்களையும், யுவதிகளையும் அழிவுப் பாதையிலிருந்து மீட்டெடுங்கள். வரலாறு உங்கட்கு நன்றி கூறும். மதத் தலைவர்கள், சமூகப் பிரமுகர்கள் ஆகிய நீங்கள் உங்கள் கணிப்பை முன் வையுங்கள்.

பொய்மையும், அதர்மமும் ஆணவமும் கொண்ட வாழ்வில் இருந்து விடுபடுவோம். அதிலிருந்து வரும் ஆரோக்கியமான அரசியல் ஊடாக சிறீலங்கா அரசின் கயமைகளை எதிர்கொள்வோம் உலக மனச்சாட்சியை எம் பக்கம் திருப்புவோம். ஆக்க பூர்வமான அரசியலை மேற்கொண்டு அநியாயமாகத் "தியாகம் " என்னும் மாயையில், எம் மக்களின் இரத்தக்கறை படிந்த வரலாற்றில் இளைஞர்களும், யுவதிகளும் இணைவதைத் தடுப்போம்

– பொது மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

13.06.90 தொடக்கம் திருகோணமலை அவலமாக உள்ளது. மட்டக்களப்பில் தொடங்கிய சண்டை திருகோணமலையிலும் பரவியது. ஒருவரும் இதை எதிர்பார்க்கவில்லை.

எல்லோரும் வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்தார்கள். நாமும் ஒரு மாதக் குழந்தையுடன் உடுத்த உடுப்புடன் சாம்பல்தீவுக்குச் சென்றோம். புலி ஆட்களின் வாகனத்திலேயே சென்றோம்.

வழமைபோல் அடுத்த நாள் வந்துவிடலாம் என்று நினைத்துத்தான் இடம்பெயர்ந்தோம். ஆனால் செல் தாக்கம் உக்கிரமாக இருந்ததினால் கால் நடையாகச் சாம்பல் தீவிலிருந்து நிலாவெளிக்குச் சென்றோம்.

2 நாட்களின் பின்பு அங்கும் செல் அடியும், பொம்பர் தாக்குதலும் நடந்தது. அதனால் அங்கிருந்து கும்பறுப்பிட்டியிற்கு இரவு 10 மணிக்கு பள்ளமும், திட்டியும் தாண்டிச் சென்றோம். செல்லும்போது பட்ட அவலம் இருக்கே, அதை எப்படி வர்ணிப்பது என்று தெரியவில்லை.

பின்பு நான் ரவுணுக்கு வரும் ஒரு சிலருடன் நடப்பது நடக்கட்டும் எனத் திரும்பி வந்தேன். வீட்டில் எல்லாப் பொரு






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ட்களும் கொள்ளையிடப்பட்டிருந்தன. உடுப்புப் பெட்டிகளையே காணவில்லை.

நான் வந்த பின்பு எனது சகோதரிகள் 13 நாட்கள் கழித்து வீடு வந்தார்கள். அப்பாவுக்குக் கண்ணும் தெரியாது காதும் கேட்காது. அவரைக் கூட்டிவருவது கஷ்டம் என நிலாவெளியில் விட்டு வந்தார்கள். அவர் இன்னும் வந்து சேரவில்லை.

இப்படியேதான் ஒவ்வொரு குடும்பத்தாரும் அவலப்பட்டு கொண்டிருக்கிறார்கள். இந்த யுத்தத்தால் சாதித்தது எதுவுமே இல்லை. மக்கள் பலர் உயிரிழந்து, உடைமைகளை இழந்து, அகதிகளாக நடுத்தெருவில் விடப்பட்டது உண்மையே.

இங்கு சிவன் கோவிலடி, கண்ணகிபுரம், பெரியகடை வீடுகள் உட்பட சகல கடைகளும் சூறையாடப்பட்டு எரிக்கப்பட்டு விட்டன. இனிமேல் இந்த மக்களால் எழ முடியுமா? என்பது கேள்விக்குறியே.

அவசியமான யுத்தமாக இருந்தால் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் தலைக்கனத்தால், தான்தோன்றித்தனத்தால் எழுந்த அகங்கார யுத்தம் என நினைக்கும்போது ஆத்திரம் எல்லைமீறுகிறது. ஆனாலும் எம்மால் ஒன்றுமே செய்ய முடியாது.

இந்த யுத்தத்தால் திருமலையில் மட்டும் 100க்கு மேற்பட்டவர்கள் இறந்துள்ளார்கள் மில் ஒன்றில் செல் விழுந்ததில் 50 பேர் அந்த இடத்திலேயே மாண்டுள்ளார்கள்.

ஒரே பயங்கரமாய் உள்ளது. எங்கே ஓடுவது என்பது கேள்விக்குறியாய் உள்ளது.



---


*திருகோணமலையிலிருந்து அனுப்பப்பட்ட ஒரு கடிதத்திலிருந்து முக்கியமான சில பகுதிகள் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புக் காரணங்கள் கருதி கடிதம் அனுப்பியவர் விபரம் தவிர்க்கப்பட்டுள்ளது.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு குருவிப் போராளியினதும்



சி ட் டு

# நமது தேசத்தினதும் கதை

வெள்ளி முளைப்பதற்குச் சற்று முன்பாக
இருள் திரண்டிருந்த
ஒரு மதிற்சுவரின் ஓரமாக
குறிவைத்த துப்பாக்கியுடன்
காவலிருக்கையில்
அது நடந்தது.

ஒரு கணப்பொழுது கூட
அயராது
விழித்திருக்கும் அவனது விழிகள்
ஊடுருவி நின்ற
டச்சுக்கோட்டை மதிலின்
மேற்புறமாக
ஆமை ஓடுகளாய்
தலைகள் உயர்வதை எதிர்பார்த்திருக்கையில்
அது நடந்தது.

www.tamilarangam.net

துப்பாக்கி ரிகரின்
'கிளிக்' ஒலியளவேனும்
சத்தமிடாமல்,
முனகாமல்
தொப்பெனச் சரிந்து விழுந்தது
அவன் உடல்.

முதல் நாளிரவில்
கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் நடுவே
எதிரிகள் குருதியால் கோலமிடப்பட்ட
தனது சீருடையில்
பெருமிதம் பொங்க நிமிர்ந்து நின்றதை
அந்தக்கணம்
அவன் நினைத்திருக்கக் கூடும்.

தேசம் முழுவதும்
இரவின் கருமையும்
பகலின் வெம்மையும்
உரமேற்றிய வீர மிதப்புடன்
நடந்து திரிகையில்...

ஒவ்வொரு வேட்டொலியையும்
விடுதலைக் கீதமாய்
எண்ணி வெடித்ததை
அந்தக் கணம்
அவன் நினைத்திருக்கக் கூடும்.

ஆயினும்,
பிடரியில் புகுந்து
நெற்றியால் புறப்பட்ட
ஈயக் குண்டு
தன் வரலாற்றை முடித்து வைத்ததை
நாளைய தினத்தின்
தெருவோரச் சுவர்களில்
வீரமரணம் அடைந்த தியாகியாய்
தனது பெயரும் பொறிக்கப்படப் போவதை
அவன் நினைத்திருக்க நியாயமில்லை.

விடுதலைப் போரின் புனிதப் பெயரால்
திசைமாறிய துப்பாக்கிகளை
சுமந்து திரிந்ததை
அவன் அறிந்திருக்கப் போவதில்லை.

www.tamilarangam.net


இன்னும் இன்னும்
நூறு நூறாக
துப்பாக்கிகள் சுமந்தபடி
அவனது பாதையில்
'தியாகிகள்' தோன்றுவர்.

இவ்வாறாக
எமது தேசத்தின் விடுதலைப் போரை
துப்பாக்கிகளும்
ஈயக் குண்டுகளுமாய்
நடாத்தி முடிக்கும்.

உயிரை இழந்த போராளிகளும்
உணர்வை இழந்த மக்களும்
இரத்தம் சிந்திய தியாகிகளாய்
எமது தேச வரலாற்றில்
பொறிக்கப்படுவர்.



www.tamilarangam.net




(கலம் 32இன் தொடர்ச்சி)

"இங்க பார் சூரியா. நீயும், நாமும் இப்பிடி ஆத்திரப்பட்டுப் பிரயோசனமில்லை. நாங்கள் இப்ப இருக்கிற வீட்டுக்காறற்றை கொட்டத்தை முடிந்தவரை அடக்கிப் பார்ப்பம். முடியாட்டி கைவைக்க வேண்டியதுதான்"

"ஏய்... அப்பிடி ஒண்டும் செய்து போடாதைங்கோ உடன பாஸ்போட்டில றெட் மார்க் போட்டு ஊருக்கு அனுப்பிப் போடுவினம்"

"ஐயோ.. இண்டைக்கு கனநேரம் கதைச்சுப் போட்டம். எங்கயோ பார்ட்டிக்குப் போகப் போறன் எண்டதுகள்' கிளாரு பரபரத்தாள்.

"கொஞ்சம் பொறடி. எங்கட சனம் ரண்டு வருகுது!

வந்தவர்களில் ஒருவன் பெண்களைப் போல் தலைமுடியை நீளமாக வளர்த்து ஒற்றைப் பின்னல் இட்டு நெற்றியில் பொட்டுடன் தோற்றமளித்தான்

"நீங்கள் சிறிலங்காவே?" அவர்களில் ஒருவன் கேட்டான்.

"ஓம். ஏன் கேட்கிறியள்?" சூரியா கேட்டாள்.

"இல்லை பாக்கத் தெரிஞ்சுது. நானும் சிறிலங்காதான். நீங்கள் ஊரில எவடம்?"

"அரியாலை. என்ன வெளியில போக வந்து நிக்கிறியளே

"ஓம். கனடாவுக்குப் போவம் எண்டு"

சிறிது நேரம் பலதையும் அலசினார்கள். பின் வார்த்தைகள் பாதை மாறத் தொடங்க...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"செருப்பு வேணுமே?" சூரியாவின் கேள்வியில் அவர்கள் விலகிப் போனார்கள்.

"இனியும் நிக்கேலாது . நான் போறன்" கிளாரு பொறுமையிழந்தாள்.

"சரி நாளைக்குச் சந்திப்பம்"

எல்லோரும் ஏதோ நம்பிக்கைகளுடன் பிரிந்து சென்றார்கள்.

சூரியாவும், ஜனுவும் பிளவர் றோட்டைத் தாண்டி றிச்சாட் பிளேசால் நடந்தார்கள்

"ஏன் சூரியா, கொண்ணை லெற்றர் போட்டிருக்கிறார் எண்டாய். என்னவாம்?"

"காசைச் சேர்த்துக் - கொண்டு வரட்டாம். தன்னையும் எங்கயேன் வித்து எனக்கும் ஒரு மாப்பிள்ளை வாங்கித் தாரு-ராம்" வேதனையுடன் சொன்ன சூரியாவின் கைகளை ஆதரவுடன் பற்றிக் கொண்டாள் ஜனு.

"அப்ப என்ரை குஞ்சுக்கு கலியாணம் நடக்கப் போகுது. இனி அவர் வந்தால் எங்களையெல்லாம் மறந்து போடுவாய் என்ன?"

"சும்மா இரு. இப்பிடி ஒரு கலியாணம் நான் செய்ய வேணுமே? நான் இங்க இவ்வளவு துன்பப்பட்டு வேலை செய்து உழைச்ச காசைக் கொண்டு போய் ஆரோ ஒரு சோம்பேறிட்ட குடுத்து ஒரு பிள்ளை பெறவேணுமே?"

"பின்ன என்ன இப்பிடியே இருக்கப் போறியே?"

ஏன் இருந்தால் இருபடாதே?"

"இங்க பார் சூரியா. உன்ரை உணர்வுகளைப் பாராட்டுறன். உன்ரை மனசு விரும்புற மாதிரி பணத்தை நேசிக்காமல் உன்னை நேசிக்கிறவனாய் இருந்தால் நீ கலியாணம் செய்யிறதில தப்பில்லைத்தானே?"

"ஓ. கே.. ஓ. கே. உந்தக் கலியாணக் கதையை நிப்பாட்டுவம்"

"நீ எதையோ மனசுக்க வைச்சுக் கவலைப்படுற மாதிரி கிடக்கு. ஏன் எனக்குச் சொல்ல கூடாதே"

"மற்றவர் துன்பத்தைத் தெரிந்துகொள். உன் துன்பத்தை சொல்லிவிடாதே என்று ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கிறார்"

"அவர் சொன்னால் சொல்லட்டும். நீ இப்ப எனக்குச் சொல்லு. இல்லாட்டி நாளைக்கு உன்னைப் பாக்கிறவரைக்கும் சாப்பிட மாட்டன்"

"சரி சொல்லுறன்"

றிச்சாட் பிளேசை விட்டு இப்போது கிளாங்கோ வீதிக்கு வந்திருந்தனர்.


"வீட்டை நினைச்சால்தான் கவலையாய் கிடக்கு. காசை

www.tamilarangam.net

தாருங்கோ எண்டு கடன்காரர் ஏசுகினமாம். கடன் கொடுக்க வேண்டியது ஆம்பிளைப் பிள்ளையள்தான். நீ ஏன் இப்பிடிக் கிடந்து கஸ்ரப்படுறாய். வீட்டுக்குவா எண்டு அம்மா எழுதுறா.

எங்கடை பெற்றோர் இப்பிடிச் சிந்திக்கிறதை எப்ப நிறுத்தப் போகினமோ தெரியவேயில்லை. ஏன் ஆம்பிளையளிட்ட மட்டும் பொறுப்பை ஒப்படைக்கினம்? இப்பிடி ஆம்பிளையளிட்ட பொறுப்புகளைக் கொடுக்கிறதாலதான் சீதனம் எண்ட பிசாசு எங்களை ஆட்டிப் படைக்குது

எல்லா வீட்டு ஆம்பிளையளும் நாங்கதான் அக்கா, தங்கச்சிக்கு வீடு கட்டிக் குடுத்து, நகை போட்டு, காசை கொடுத்து கலியாணம் கட்டி வைக்க வேணும் எண்ட உணர்வோடயே வாழுயினம். அக்கா, தங்கச்சியை சுயமாய் வாழ வழிசெய்து குடுப்பம் எண்ட யோசனை ஆருக்கும் இல்லை. அதைப் போலவே அண்ணை, தம்பி எங்களுக்கு இருக்கினம் தானே எண்ட சகோதரிகள் கனபேர் இன்னும் சோம்பேறிகளாய்..."



"நல்லாய்தான் சிந்திக்கிறாய். ஏன் இப்பிடியொரு நிலைமை? எங்கடை நாட்டில ஏன் எங்களுக்கு வேலை இல்லை? நாங்கள் சிந்திக்கிறதை ஏன் செயற்படுத்தேலாம இருக்கு?"

"எங்கடை நாட்டில இருக்கிற தர்பாருகளும், பீடங்களும் தான் இதற்கு பிரதான காரணிகள்" என்றபோது சூரியாவுக்குள் ஆவேசம் கனன்றது.

நேரம் போகவே விடைபெற்றுக்கொண்டு ஜெ கேற்றை திற்ந்து வீட்டுக்குள் வரும் போதே வீட்டுக்காரியின் குரைப்புச் சத்தம் வரவேற்றது.

"வேலைக்காரிக்கு மகாராணி எண்ட நினைப்பு. சுத்திப் போட்டு வாறா"

ஜெ ஒன்றும் பேசாமல் தனது வேலைகளை ஆரம்பித்தாலும் மனது துன்பப்பட்டுக்கொண்டிருந்தது.

'ஏன் இவள் இப்பிடி துள்ளுறாள். இவளின்ரை பெற்றோரும் அன்று கப்பலேறி இங்க வந்திராட்டில் இன்றைக்கு இவர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நிலைமையும் இலங்கையில் கேள்விக்குறிதானே? இதுகளும் தமிழர்கள்தானே. ஏன் இப்படி புரிந்துணர்வு இல்லாமல் கொடுமைப்படுத்துதுகள்...? இதுகளிடம் எல்லாம் ஏச்சு வாங்க வேண்டிய நிலைமை ஏன் வந்தது?'

மனசுக்குள் நிறைய விடை தெரியாத கேள்விகளும், விளக்கமில்லாத பதில்களும் போல் துன்பங்கள் எழுந்து நின்று தொல்லை கொடுத்தன.

'நாளைக்கும் பெட்டையளோட கதைக்கலாம்தானே' என்ற நம்பிக்கையுடன் வேலைகளில் கவனமானாள்.

இன்று கிடைத்த சுதந்திரமும் நாளை பறிபோகப் போகிறது என்பதை அவள் அறிந்து கொள்ளவில்லை.

●

# இலங்கையிலிருந்து...




இனங்களுக்கிடையில் நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கம் (MIRJE) வெளியிடும் மாதாந்தப் பத்திரிகை.

1 வருடச் சந்தா: 15 டொலர்

முகவரி: MIRJE
No.6, Aloe Ave.
Colombo. 3
SRI LANKA

www.tamilarangam.net

எதிர்வரும் செப்ரெம்பர் 3ஆம் திகதியன்று எதிர்க்கட்சிகள் ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்து வடக்கு, கிழக்குப் பிரச்சினைகள் தொடர்பாக பேச விருப்பதாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் இந்த எதிர்க்கட்சிகள் வடக்கு, கிழக்கில் நடைபெறும் விமானக் குண்டுத் தாக்குதலை நிறுத்தும்படியும், மக்களுக்கு உணவு விநியோகம் செய்யும்படியும், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க உடன் முன்வருமாறும் ஜனாதிபதியிடம் கேட்கவுள்ளன.

கடந்த யூன் மாதம் 11 ஆம் திகதி யுத்தம் தொடங்கியதிலிருந்து, திட்டமிட்ட வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டாலும் அரசினால் மிகக் கவனமாகச் செயற்படுத்தப்பட்டுவரும் பொருளாதாரத் தடை காரணமாக பெருமளவில் மக்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்கியுள்ளனர்.

பல முகாம்களில் உணவு, மருத்துவ பற்றாக்குறையினால் இறப்புகளும் ஏற்பட்டுள்ளது.

அம்பாறையில் மக்கள் பிச்சையெடுத்து உண்ணுவதாகவும் தகவல்கள் வந்தன.

இந்தப் பின்னணியில் இந்த எதிர்க்கட்சிகள் டெலோவின் ஒழுங்கமைப்பின் காரணமாக ஜனாதிபதியுடன் பேசச் செல்வது ஒரு முக்கியமான விசயமாக எனக்குப்பட்டது.

வடக்குக், கிழக்கிற்கு உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படப்போவதாகவும், ஏற்கெனவே தொடர்ச்சியான விநியோகம் நடந்து வருவதாகவும் அரசு தரப்பில் அறிக்கைகள் விடப்பட்டபோதும், அவை வெறும்

## தேசத்தின் குறிப்புக்கள்

இலங்கையிலிருந்து

பிரஜைகள்

www.tamilarangam.net

பொய்யான தகவல்களே என்பது எல்லோரும் அறிந்தவை.

குறிப்பாக குடாநாட்டுக்கு அனுப்பப்பட்ட சொற்ப உணவுப் பொருட்கள் கூட ஊரடங்கு நிலை காரணமாகவும், பொம்பர், மற்றும் ஹெலி தாக்குதல்களாலும் விநியோகிக்கப்படாமல் கிடப்பதாகத் தகவல்கள் வந்துள்ளன.

கொழும்பிலிருந்து தனியாராலும், மத நிறுவனங்களாலும் அனுப்பப்பட்ட உணவு லொறிகள் கூட வவுனியாவில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

ஏற்கெனவே கிளிநொச்சி வரைபோன 7 லொறி உணவுப் பொருட்கள் புலிகளால் திருப்பி அனுப்பப்பட்டதாக சிறில் ரணதுங்க பத்திரிகையாளர்களிடம் தெரிவித்ததன் உண்மை அர்த்தம் அவர்கள் போகாமலே திரும்பி வந்ததுதான் என்பதும் எனக்குத் தெரிந்திருந்தது.

இத்தகைய ஒரு நிலையில் உணவுக்கும், மருத்துவத்துக்கும் கஷ்ரப்படுகின்ற மக்களின் அவல நிலையை நீக்க யாராவது பேசுவது எவ்வளவு முக்கியமான விசயம்?

யாழ்ப்பாணத்தில் தீப்பெட்டி, மெழுகுவர்த்தி கூடக் கிடையாதென்றும், சுன்னுகம் மின்நிலையமும் அரச படைகளினுல் தகர்க்கப்பட்ட பின்னர் முழு இருட்டினுள், வெளிச்சமின்றிப் பறக்கும் விமானங்களிலிருந்து குண்டுகள் எந்தக் கணமும் வீசப்படலாம் என்ற அச்சத்துடன் நாளின் பெரும்பொழுதைப் பதுங்கு குழிக்குள்ளேயே மக்கள் கழிக்க வேண்டியிருக்கிறதென்றும், நாளுக்குநாள் புலிகள் மீதான யுத்தம் என்ற பேரால் மக்கள் கொல்லப்படுவதும், தேவாலயங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள் தகர்க்கப்படுவதும், அகதி முகாம்கள்கூடத் தாக்கப்படுவதும் செய்திகளாக வந்துகொண்டிருப்பதால், இந்தப் பேச்சுவார்த்தை ஒருவகை எதிர்பார்ப்பை அனைத்து மக்களிடையேயும் ஏற்படுத்தும் என்பதில் வியப்பில்லை எனவும் நான் நினைத்தேன்.

ஆனுல் எனது நண்பருடன் இதுபற்றி நான் பேசத் தொடங்கியபோதே, அவர் இந்தப் பேச்சுவார்த்தையில் அதிக அக்கறை காட்டவில்லை என்பது தெரிந்து போயிற்று. இது ஒரு வகையில் எனக்கு அதிர்ச்சியாகவும் இருந்தது.

"இந்தப் பேச்சுவார்த்தையின் பயனுக அப்படி என்னதான் நடக்கப் போகின்றது என்று நீ எதிர்பார்க்கின்ருய்? ஏன் எதற்கெடுத்தாலும் ஆவலாதிப்படுகிற ஆளாய் இருக்கிருய். இந்த கட்சியள் இப்ப புதிதாக பிரேமதாசவுக்கு என்னத்தைத்தான் சொல்லப் போகினம்" என்று சீறினுர் அவர்.

"புதிதாக எதையாவது சொல்வதல்ல. 22 எதிர்க்கட்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் ஒன்ருய் சேர்ந்து ஒருமுக மாய் பேச வந்திருக்கின்றன . அவை ஒன்ருக யுத்தத்தை எதிர்க்கின்றன என்ருல் அது அரசுக்கு ஒரு பிரச்சினையாக இருக்காதா? நிச்சயம் பிரேமதச இதற்கு ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்படமாட்டார் என்று நினைக்கிருயா?"

அவர் பதில் சொல்லாமல் சிரித்தார். கொஞ்ச நேரத்தின் பின் கேட்டார்:

"இந்தக் கட்சியள் யுத்தத்தை எதிர்க்குது என்று உனக்கு எப்பிடித் தெரியும்?"

"ஏன் பேப்பரிலே நீ பாக்கேலையே..?"

"நீ நியூசை மட்டுந்தான் பார்க்கிருய். அதுக்குப் பின்னுலே உள்ள விசயங்களைப் பார்ப்பதில்லே எண்டதுதான் எனக்கு இவ்வளவு நாளும் உன்னிலே இருந்த விமர்சனம். இப்பதான் தெரியுது நீ நியூசையும் ஒழுங்காய் பார்ப்பதில்லே என்று"

"நீ என்ன சொல்லுருய்? எனக்கு விளங்கேல்லே"

"அவங்கள் யுத்தத்தை எதிர்க்கேல்லே. யுத்தம் செய்யிறதாலே மக்கள் பாதிக்கப்பட கூடாது எண்டுதான் சொல்லுருங்கள். மக்களுக்கு எதிராகச் செய்யிற யுத்தத்திலே மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்று கேக்கிறது உனக்கு விசித்திரமாயில்லேயா?"

"அப்ப மக்கள் பாதிக்கபடுவது சரி என்று சொல்கிருயா?"

"நான் சொல்ல வந்தது அதல்ல. உனக்கு எப்பவுமே அவசரப் புத்தி. அங்கு நிலவுகிற 'நிலைமை தொடர்பாக' பேச தான் இவர்கள் போகிருர்கள். புலியளை அழிக்க வேணும் எண்டதிலே இவையளுக்கு ஒரு கருத்து வேறுபாடும் இல்லே. அதாலே யுத்தம் நிறுத்தப்படவேணுமெண்டு இவையள் கேக்கப்போறதும் இல்லே. அங்கு எப்படி மக்கள் பாதிக்கப்படாமல் தாக்குதலே நடத்தலாம் எண்டு ஆலோசிக்கத்தான் இவை போகினம்"

"ஆனுல் பேப்பர் நியூ-சைப் பார்த்தால்....."

"பேப்பர் நியூஸ் கொழும்புக்கு வெளியிலே இருக்கிறவையை அல்லது உன்னே மாதிரி ஆட்களைப் பேக்காட்ட. இவ்வளவு நாளும் இந்தக் கட்சியள் விட்ட அறிக்கையளை நீ படிக்கேலையே? பொதுமக்களை பாதிக்காமல் புலிகளை அழிக்கிற பொறுப்பை அவை அரசாங்கத் திட்டை விட்டிட்டினம். இப்ப பொதுமக்கள் பாதிக்கப்படேக்கை அதைப் பற்றிப் பேசாமல் இருந்தால் தங்கடை அரசியல் பிழைப்புக்கு கஸ்டம் எண்டிட்டு இப்ப பேசப் போகினம். அங்கைபோய் நாங்கள் புலியளோடை சண்டை பிடிக்கேக்கை மக்கள் கொஞ்சம் பாதிக்கப்படுறது சாத்தியம்தான். அதைத் தவி

www.tamilarangam.net


ர்க்க கூடியளவு முயற்சி எடுக்கிறம். எண்டாலும் சில இடங்களிலை தவறுதலாக எப்பவாவது மக்கள் கொல்லப்பட்டு விடுகிறார்கள். தான் அதை எப்படியாவது குறைக்க நடவடிக்கை எடுக்கிறம் எண்டு பிரேமதாசா — சொல்லுவார். அதோடை இவை திரும்பியிடுவினம்"

"அப்ப இவையளின்ரை — பேச்சாலை பிரயோசனம் இல்லையெண்டு சொல்லுறியா? சாப்பாட்டுச் சமானுவது அங்கை போகாது எண்டு சொல்லுறியா?

"சாப்பாட்டுச் சமானை அனுப்ப இவர் ஒருகாலமும் மறுக்கேலையே? போன சாமானை புலி திருப்பி விடுகுது எண்டு இவங்கள் கறடி விடுகிறுங்கள். அதை இந்த எதிர்க்கட்சியளும் 'நம்பிகொண்டு' இருக்குது. உண்மையிலை இந்தக் கட்சியளுக்கு மக்களிலை அக்கறை இருந்திருந்தால் யுத்தத்தை நிறுத்தச் சொல்லி அரசாங்கத்தோடை போராடியிருக்க வேணும்"

"புலியள்தான் வலுச் சண்டைக்கு வந்தவை. அவைதான் யுத்தத்தை விடவேணுமெண்டு அரசாங்கம் சொல்லுதே!"

"அரசாங்கம் அப்பிடித்தான் சொல்லும். புலியள் யுத்தத்தை விட்டால் படபடவெண்டு ஊரைச் சுற்றிவளைத்து ஆமியளை போட்டிட்டு பிறகு சாப்பாட்டைக் குடுக்கத் தொடங்கும். ஆயுதங்களை களையிறது எண்டு மட்டக்கிளப்பிலை செய்தமாதிரி




எல்லாரையும் வழமை போல பிடிச்சுக்கொண்டு போகும். அவங்கள் யுத்தத்தை நிறுத்திறது இண்டைக்கு எல்லாருக்கும் சிக்கல்தானே. அவங்கள் அதை விடமாட்டாங்கள். அதாலைதான் அரசாங்கம் அப்பிடிச் சொல்லுது. இந்த இயக்கங்கள் அரசாங்கம் தமிழ் மக்களின்ரை பிரச்சினையளை தீர்க்காதவரை யுத்தம் செய்யிறது புலிக்கு எதிரானதாக இருக்க முடியாது எண்டு தெரிவிச்சிருக்க வேணும். அது மக்களுக்கு எதிரான யுத்தம் தான் எண்டு அம்பலப்படுத்தியிருக்கவேணும். எந்த நிபந்தனையும் இல்லாமல் யுத்தத்தை நிறுத்திவிட்டு தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்க அரசாங்கம் என்ன செய்யப் போகிறது என்பதை அறிவிக்க வேணும் என்று கேட்டிருக்க வேணும். அதைச் செய்யாமல் சும்மா மக்கள் பாதிக்கப்படுகிறுர்கள் என்று மாரித்தவக்கை மாதிரிக் கத்தி என்ன பிரயோசனம்?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" . . . . . . . "

"அரசாங்கம் ... புலியளோடை யுத்தத்தை நடத்திச் செல்லவேணும் என்ற நப்பாசைதான் இவர்களை இப்பிடிப் பேசவைக்குது. அதாலை தான் அரசாங்கத்தோடை சேர்ந்து நிண்டு யுத்தத்தைச் சப்போட் பண்ணிக் கதைக்கினம். அரசாங்கம் நடத்துற யுத்தம் புலியளுக்கு எதிரானதல்ல, அது பொது மக்களுக்கு எதிரானது என்பதை இவையள் இன்னும் அடிச்சுச்சொல்லேலை. சொல்லப் போறதும் இல்லை"

"அப்ப இவையள் என்னதான் சொல்லுறுங்கள்? இவங்கடை நோக்கம் என்ன?"

"இவையள் முதல் மக்களுக்கு எதிராக இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தேக்கையும், ஆக்கிரமிப்பை நடத்தேக்கையும் அதை ஆதரிச்சவை. அப்பவும் புலியளை அழிக்கிறது-தான் இவையளின்ரை நோக்கமாயிருந்தது. இப்பவும் இலங்கை அரசோடை சேர்ந்து நிண்டு கொண்டு புலியளை அழிக்கிறதுக்குப் பாக்கினம்.."

"ஏன் புலியள் மற்ற இயக்கங்களை அழிச்சதை மறந்து போனியோ?"

"மறக்கேல்லை. ஆனால் மக்களுக்கு எதிரான யுத்தத்தை இந்திய அரசு தொடுக்கேக்கையும், இலங்கை அரசு தொடுக்கேக்கையும் இவையள் அரசாங்கங்களைச் சார்ந்து நிக்கினம். புலி 'எதிர்த்து' நிக்குது. அதுதான் புலியளுக்கும் இவைக்கும் வித்தியாசம். புலி இந்தியாவோடையும் சரி, இலங்கையோடையும் சரி கள்ளக்கூட்டு வைச்சது உண்மைதான். ஆனால் மக்களுக்கெதிராய் அவையள் சண்டை தொடங்கேக்கை மக்களின்ரை பக்கம் 'நிண்டது' ஒரு முக்கியமான விசயம்தானே.. அது ஒண்டுதான் புலியளை இன்னும் காப்பாற்றி வருகுது"

"இதிலை எனக்கு ஒருசிக்கல் இருக்கு. இந்தியாவும், இலங்கையும் புலியளை அழிக்க யுத்தம் நடத்தேக்கை அதை மக்களுக்கு எதிரான யுத்தம் எண்டு எப்பிடிச் சொல்லுறுய்? புலியள் மக்களுக்கு எவ்வளவு அநியாயங்கள் செய்தவங்கள் எண்டு தெரியாதே?"

"தெரியும். ஆனால் அதுபுலியளின்ரை அரசியல். அதுக்கு அவங்கள் பதில் சொல்ல வேண்டித்தான் வரும். ஆனால் நீ போன முறை நான் சொன்னதை மறந்திட்டாய் போலை. புலியளின்ரை யுத்தம் எங்கடை மக்களின்ரை நலனோடை பிணைஞ்சு கிடக்குது எண்டு சொன்னனே அதுதான். தமிழ் மக்களின்ரை பிரச்சினையைத் தீர்க்காதவரைக்கும் புலியளை அழிக்க எந்த அரசாங்கத்துக்கும் உரிமை கிடையாது

(தொடர்ச்சி 48 ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யாருக்காக இந்த யுத்தம்?

(கலம் 32இன் தொடர்ச்சி)

இரண்டு வருட காலமாக காடுகளிலும், நகர்ப் புறங்களிலுமாகப் புலிகள் நடத்திய யுத்தத்தில் 1,500க்கும் அதிகமான இந்திய இராணுவத்தினர்களையும், இந்தியப் படையின் ஆதரவில் இயங்கிய கொலைகார இராணுவ அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான உறுப்பினர்களையும் தாங்கள் கொன்றிருப்பதாகப் புலிகள் கூறுகிறார்கள்.

இந்த இராணுவக் குழுக்களைச் சேர்ந்த இளம் பிள்ளைகள் துப்பாக்கிமுனையில் திரட்டப்பட்டவர்கள் என்ற உண்மையை புலிகள் கவனத்தில் எடுக்கவேயில்லை.

எதிரிக்கு அனுசரணையாக நடந்ததாகத் தாங்கள் தீர்மானித்துக்கொண்டால் அந்த நபரையோ அல்லது அவரது உறவினர்களைக்கூடப் புலிகள் படுகொலை செய்தனர்.

ஒருமுறை புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் ஆறு இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டதும், இந்திய அமைதிப் படையினர் யாழ்ப்பாணத்தின் ஒரு கரையோரச் சிறு நகருக்குள் வெறிகொண்டது போல் புகுந்து மூன்று நாட்களாக அதனைத் தீயிட்டு, கொள்ளையடித்ததுடன் சிறு குழந்தைகள் உட்பட 51 அப்பாவிப் பொதுமக்களை படுகொலை செய்தனர். மருத்துவ சேவையாளர்கள் இவர்களின் சடலங்களை நாய்கள் குதறிய நிலையில் வீதியோரங்களில் கண்டனர்.

5,000இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தங்கள் வீடு வாசல்களை இழந்து நின்றனர்.

அச் சந்தர்ப்பத்தில் இலண்டனில் இருந்த தனது நண்பர்களுக்கு ராஜனி எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதி:

---

ஜோன் - மெரிட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கொலைச் சம்பவங்களா?
எத்தனை பேர் என்றா?
உதாரணத்திற்கு ஒன்றா கேட்கிறீர்கள்?
தயவுசெய்து இப்போது வேண்டாம்
என் மனமே நெரிக்கப்பட்டிருக்கிறது.
ஓம்! இப்படித்தான் நாங்கள் வாழ்ந்து
கொண்டிருக்கிறோம்.
வேதனையும் துக்கமும் அச்சமும்-
ஆம்,
எப்போதும் அச்சத்தில்!
உங்களை ஒன்று கேட்கிறேன்-
ஜனங்கள் கும்பல் கும்பலாய்
செத்து விழுந்து கொண்டிருக்கையில்
உங்களால் எழுத வருமா?

அவர்கள் எறும்புகளைப்போல
சாவதைப் பார்த்துக்கொண்டு
இங்கே
அதோ அங்கே
ஆஸ்பத்திரி நடைபாதைகளில் வீசப்பட்டு
நாய்களும் காகங்களும் குதறிய
நிலையில்-

உங்கள் அயலவர்களை
அவர்களின் வளவுகளுக்குள்ளேயே
புதைக்க நேர்கையில்-

ஆயிரமாயிரமாய் மக்கள்
கோயில்களில்
தேவாலயங்களில்
பாடசாலைகளில்
நெருங்கி வழிவதை-

கோயில் உள்வீதிகளின்
அழகிய மணற்பரப்பு
மலக் குழிகளாய்,
ஜனத்திரளின் நரகக்குழிகளாய்
மாறுகையில்-
எப்படி நீங்கள் எழுதுவீர்கள்?

ஜனங்களைப்பற்றி யாருக்கு அக்கறை?
அரச, இந்திய ராணுவம்,
புலிகள், மற்ற இயக்கங்கள்
யாருக்குமே கவலையில்லை!

நாங்கள் இன்று பொறியில் அகப்பட்ட
மக்கள்
ஒரு தற்கொலைப் பாதையில்
நடக்க நிற்பந்திக்கப் பட்டிருக்கிறோம்.

எங்களின் வீரத் தளபதிகள்,
விடுதலைப் போராளிகள்,
எதிரிகளை, எங்கள் படலை
வாசலுக்குள்-
ஆஸ்பத்திரிகளுக்குள்
கொண்டு வந்து சேர்ப்பதில்
கெட்டிக்காரர்கள்.

பிறகு என்ன? யுத்தம் -
கண்ணி வெடியைக் கொளுத்து!
ஒவ்வொரு அகதி முகாமிற்குள்ளும்
ஒளிந்து கொண்டு சுடு!
பிறகு பாதுகாப்பாய் தப்பி ஓடிவிடு!
ஓம்,
புலிகள் பின்வாங்கி விடுவார்கள்

நாங்கள்
பலிக் கடாக்கள்
கும்பல் கும்பலாய்
செத்து விழுகிறோம்"
- ராஜனி.

புலிகளுக்கும், இந்திய, இலங்கைப் படைகளுக்கும் இடையிலான போர் நிறுத்தம் அமுலான இரண்டாவது நாளில் ராஜனி படுகொலை செய்யப்பட்டார்.

இந்திய இராணுவம் வெளியேறி வடமாகாணத்தின் நாளாந்த வாழ்க்கையின் மீது புலி

www.tamilarangam.net

கள் அதிகாரபூர்வமான கட்டுப்பாட்டை வழங்கும் ஒப்பந்தத்தைப் புலிகள் பெற்றுக் கொண்டநிலையில் ராஜனி சுடப்பட்டார்.

சட்டத்தை அமுலாக்கும் பொறுப்பு அவர்களிடமே பூரணமாக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சொல்கிறார்:

"எங்களிடம் ஆயுதபலம் இருக்கிறது. நாங்கள் பலத்தின் தளத்திலிருந்து கதைக்கிறோம்"

, மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின்அமைப்பு "முறிந்த பனை" என்ற தலைப்பில் ஒரு ஆய்வறிக்கையை வெளியிடத் தீர்மானித்திருந்தனர்

ராஜனி கொலை செய்யப்படுவதற்கு 3 மாதங்களுக்கு முன்னதாகவே இந்த அறிக்கையின் பல பிரதிகள் ரகசியச்சுற்றுக்கு விடப்பட்டன.

இளஞ் சிறுவர்கள் இராணுவமயமாக்கப்படுவதையும், வெறும் இராணுவ நடவடிக்கைகள் மட்டுமே உண்மையான விடுதலையை வென்றெடுக்க வல்லனவா என்பதையும் இந்த ஆய்வறிக்கை கேள்விக்குட்படுத்தியிருந்தது.

ஒருவேளை ராஜனியின் தலைவிதியை இதுதான் முற்றாக்கியதோ?

ராஜனி எழுதுகிறார்:

"ஆயுதங்களற்ற சனங்களின் அபிப்பிராயங்களுக்கும், தேவைகளுக்கும் ஒரு இடமுமில்லை. புலிச் சின்னங்கள், புலி நீதி மன்றங்கள், புலிகளின் திறப்பு விழாக்கள். சனங்கள்தான் வெளியில். தங்களின் போராட்டப் பாதையையே தீர்மானிக்க மாட்டாமல்"

ராஜனி மரணமடைந்த 2 நாட்களுக்குப் பின்னர், இலண்டனுக்கு வந்து சேர்ந்த ஒரு கடிதத்தில் ராஜனி எழுதியிருக்கிறார்:

"ஒருநாள் துப்பாக்கிகள் என்னை மௌனிக்கப் பண்ணிவிடும் ஒரு வெளியாளால் அல்ல. இந்த என் சமூகத்தின் கர்ப்பப்பையில் உருவான ஒரு மகனுல் - என் வாழ்வோடும், வரலாற்றோடும் பிணைந்த இந்த மண்ணின் மகள் ஒருத்தியால் இந்தச் சாவு என்னை வந்து சேரக்கூடும்"

"விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி" என்ற பெயரில் சட்டபூர்வமான அரசியல் கட்சியை ஆரம்பித்திருக்கும் புலிகளின் பொம்மை ராஜா அன்ரான்பாலசிங்கம் "தேசிய அபிவிருத்தி மற்றும் தமிழ் மக்களின் காணி, கல்வி, நிதி போன்ற பிரச்சினைகள் குறித்த ஒரு சுயேச்சையான அமைப்பை, ஒரு மாடலை நாம் ஆக்க வேண்டும்" என்கிறார்

யாழ்ப்பாணத்தில் வசதியில்லாத மக்கள் மாதாந்தம் 2,000- ரூபாவை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நாள்பூராவும் கியூவில் நிற்கிறார்கள். (தொடர்ச்சி 41 ஆம் பக்கம்)

01.08.90 வீரகேசரி

தமிழ்நாட்டுக்கு வர ரூபா 500, ஆயிரம் என படகுக் கட்டணம் செலுத்தமுடியாதிருக்கும் பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழ்க் குடும்பங்களை விரைவில் வெளியேற்ற கப்பல்களை ஏற்பாடு செய்வதே இந்தியப் பிரதமரும் தமிழக முதலமைச்சரும் இலங்கைத் தமிழருக்குச் செய்யக்கூடிய பெரும் உதவியாகும் என இந்தியா வந்துள்ள அகதிகள் கூறியுள்ளனர்.

ஒரு அரசுக்கு யுத்தம் செய்வது கஷ்டமான ஒரு காரியமல்ல. அரசிடம் இராணுவம் உண்டு. எவ்வளவோ அப்பாவிகள் இதனால் உயிரிழப்பர் - பிரேமதாச

கடந்த காலங்களில் இணக்கம் காணப்பட்ட யுத்த நிறுத்தங்கள் எதுவுமே அர்த்தமுள்ளதாக அமையவில்லை. இனிமேல் நிரந்தர மோதல் நிறுத்தம் மூலமே பகைமை நீங்கி பேச்சுவார்த்தைக்கும் வழிவகுக்கும் என்று தமிழ் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கரைப்பற்றில் வயல்களில் இருந்து திரும்பிய 17 முஸ்லீம்கள் புலிகள் என சந்தேகிக்கப்படும் ஆயுதக்குழுவினால் கடத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர் - முஸ்லீம் கொங்கிரஸ்

கந்தளாயில் 5 முஸ்லீம்கள் கொல்லப்பட்டதன் எதிரொலியாக 10 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

வடக்கு-கிழக்கை அண்டிய எல்லைப்புறச் சிங்களக் கிராமங்களில் ஏற்கெனவேயுள்ள ஊர்க்காவற் படையினரைத் தவிர உடனடியாக 50,000 பேரை ஊர்க்காவற் படைக்குச் சேர்ப்பதற்கு அரசாங்கம் முடிவெடுத்துள்ளமை எல்லைப்புறத் தமிழ்க் கிராமங்களிற்கு மிகப்-பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதுடன், நகரங்களுக்கிடையிலான போக்குவரத்திற்கும் தடை ஏற்படும் நிலைமையை உருவாக்கியுள்ளது - ஈ.என்.டி.எல்.எவ்

முஸ்லீம் மக்களை ஆத்திரமூட்டுவதன் மூலம் இனக்கலவரம் ஒன்றைத் தோற்றுவித்து, உலகத்தின் கவனத்தைத் திசை திருப்ப முனையும் எல்.ரி.ரி.ஈ. யின் தந்திரவலையில் எந்தவொரு முஸ்லீமும் சிக்கிவிடக்கூடாது. வட-கிழக்கு முஸ்லீம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அரச அதிகாரிகளுடன் நடைமுறைப்படுத்த சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசின் தலைமைத்துவம் எடுத்திடும் நடவடிக்-கைகளை கவனத்தில் கொண்டு முஸ்லீம்கள் தொடர்ந்தும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும். - மு.கா

02.08.90 வீரகேசரி

சிறிமாவோ அனைத்து தமிழ்க் குழுக்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். ஏற்கெனவே தமிழ்க் குழுக்களை தனித்தனியே சந்தித்துப் பேச்சு நடத்திய அவர் தற்போது ஒருமித்து பேச்சு நடத்தும் வகையில் அனைவருக்கும் அழைப்பு விடுத்துள்ளார். இதில் த.வி.கூ, தமிழ் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், டெலோ, ஈ.என்.டி.எல்.எவ்., புளொட், ஈ.பி.டி.பி. ஆகிய அமைப்புகள் பங்குகொள்கின்றன.

கல்முனை முஸ்லீம் மக்கள் சார்பில் - தேசிய பாதுகாப்பு நிதிக்கு 1 இலட்சத்து 9ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது

தர்ம யுத்தம் என ஜனாதிபதியால் அழைக்கப்பட்ட யுத்தமானது இன்றுதமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமாக மாறி







www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுள்ளதுடன், எல்.ரி.ரி.ஈ. யினரும் சிங்கள, முஸ்லீம் கிராமங்களில் பழிவாங்கும் கொலைகளில் ஈடுபடவும் முற்பட்டுள்ளனர். -நவசமசமாஜக் கட்சி

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு அகதிகளாக வந்திருக்கும் இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தையும் தாண்டிவிட்டதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இராணுவத்தினரின் நில, வான் மார்க்கமான கடுமையான இருமுனைத் தாக்குதல்கள் காரணமாக பரந்தன் பகுதிகளில் பல வீடுகள், கடைகள், கட்டிடங்கள், பாடசாலைகள், வணக்க ஸ்தலங்கள் என்பன சேதமடைந்துள்ளன.

உமையாள்புரம், முரசுமோட்டை, இரண்டாம் வாய்க்கால், புளியம் பொக்கனை ஆகிய பகுதிகளில் பொம்பர் தாக்குதல்களிலும், செல் தாக்குதல்களிலும் இறந்தவர்களின் சடலங்கள் ஆங்காங்கே கிடக்கக் காணப்பட்டதாக நேரில் கண்டவர்கள் மூலம் தெரியவந்துள்ளது. படுகாயமடைந்த பலர் முரசுமோட்டை வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு அங்கு சத்திரசிகிச்சை வசதிகள் மற்றும் வைத்திய வசதிகள் இல்லாத காரணத்தால் உயிரிழந்துள்ளனர்.

கல்லாறு, சின்ன சிப்பிக்குளம் கிராமங்களைச் சேர்ந்த 10 அப்பாவி முஸ்லீம்கள் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த யக்காவெவ கிராமத்தில் வைத்து இலங்கைத் தரைப்படையைச் சேர்ந்தசில உறுப்பினர்களால் கொலை செய்யப்பட்ட சம்பவத்தையிட்டு ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக சிறிலங்கா முஸ்லீம் மாணவ சம்மேளனம் பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதமொன்று எழுதியுள்ளது.

மாகாணசபை செயற்பாட்டுக்குத் தேவையான அதிகாரங்களை கொடுக்க மறுக்கின்றது. அதிகாரப் பரவலாக்கம் ஆமை வேகத்திலேயே நடக்கின்றது. இதனால் மாகாணசபைகளால் உருப்படியான வேலைகளைச் செய்ய முடியவில்லை -சப்பிரகமுவ மாகாண சபையின் எதிர்க்கட்சி அங்கத்தவர்

வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாக அரசு இன்று நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. யுத்தம் செய்வதற்குப் பிற நாடுகள் நிதியுதவி வழங்கப்போவதில்லை. அதனால் அரசு உள் நாட்டிலேயே நிதியைத் தேட முற்படுகிறது. பாதுகாப்பு நிதிக்கென மக்களிடமிருந்து நிதி வசூலிக்கின்றனர். இது எங்கு போய் முடியுமோ கூறமுடியாது. எதிர்காலத்தில் வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாக விலைவாசிகள் உயரலாம். வாழ்க்கைச் செலவும் அதிகரிக்கலாம். இதனால் இப் பிரச்சினைக்கு ஒரு உடனடியான அரசியல் தீர்வு காணப்படுவது அவசியம் -ச.மா.எதிர்கட்சி அங்கத்தவர்

03.08.90 வீரகேசரி

நிந்தவூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அட்டப்பளம் கிராமம் விசேட அதிரடிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. இத் தேடுதலின்போது 45பேர் கைது செய்யப்பட்டு காரைதீவு அதிரடிப்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அட்டப்பளத்தில் கைதானோரின் தாய்மாரும், உறவினர்களுமாக நூற்றுக்கணக்கான பெண்கள் அழுதவண்ணம் காரைதீவு முகாமை நோக்கிச் சென்றனர்.

சம்மாந்துறைப் பொலிஸ் பகுதியில் முஸ்லீம் ஒருவரும், அவரது மகனும் ஆயுதபாணிகளால் வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர். மஜீத்புரம் பகுதியில் வயலில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த 7பேர் கடத்தப்பட்டுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அகதிகளாகி பாதுகாப்பிற்காக தமிழகம் சென்றபோது தலைமன்னார் கடற்பகுதியில் 31பேர் பலியாகியுள்ளனர்.

தோட்டத் தொழிலாளர்கள் இன்று பஞ்சத்தாலும், பட்டினியாலும் வாடிக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் அவர்களுக்குத் தேவையான சம்பள உயர்வை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து, உழைப்பாளர்களின் வாழ்க்கை தரம் உயர வழிசெய்ய வேண்டும் என



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பயணிகளின் பாதுகாப்புக் கடமைகளிலும், சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள இராணுவம் வடபகுதிக்குப் பால் மா, பிஸ்கெட், சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லவும் அனுமதிப்பதில்லை.

கல்முனையில் முஸ்லீம் பெண் ஒருவர் ஜிகாத் இயக்கத்தினர் எனச் சந்தேகிக்கப்படுவோரால் சுட்டுக் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார்.

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக அகதி முகாமில் ஏற்பட்டுள்ள பல்வேறு தொற்று நோய்களினால் 26 குழந்தைகள் இதுவரை இறந்துள்ளன.

மடத்தடி, அபயபுரம், சிறிமாபுரம் ஆகிய திருகோணமலையைச் சேர்ந்த பகுதிகளில் சிங்கள மக்கள் அவசர அவசரமாகக் குடியமர்த்தப்பட்டு வருவதாகவும், இதன் காரணமாக அச்சத்துக்குள்ளாகியிருக்கும் தமிழ் மக்கள் அப்பகுதிகளைவிட்டு வெளியேறி இடம்பெயர்ந்து கொண்டிருப்பதாகவும் தகவல் கிடைத்துள்ளதாக ஈ.பி. ஆர்.எல்.எவ். பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். அக்கரைப்பற்றில் 37 தமிழர்கள் முஸ்லீம் ஊர்க்காவற் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்களைப் பற்றி எதுவித தகவல்களும் கிடைக்கவில்லையென்றும், இதே பகுதியில் மேலும் 50க்கு மேற்பட்ட தமிழர்கள் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சென்ட்ரல் காம்ப் பகுதியில் உள்ள 12ஆம் கொலனியில் வைத்து முஸ்லீம் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

சம்மாந்துறை—வளத்தாப்பிட்டி பிரதான வீதியின் இருமருங்கிலும் உள்ள காடுகள் புல்டோசர் மூலம் அழிக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளிலுமிருந்து சுமார் 1,800 முஸ்லீம் குடும்பங்கள் அச்சம் காரணமாக பொலனறுவை மாவட்டத்திற்கு அகதிகளாக வந்துள்ளன.

குடாப்பொக்கன பகுதியில் வசித்த 68 தமிழ்க் குடும்பங்கள் பொலனறுவையில் முத்துக்கல தமிழ் வித்தியாலயத்தில் அகதிகளாக வந்து தங்கியுள்ளன.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்தும், திருகோணமலையிலிருந்தும், யாழ் குடாநாட்டிலிருந்தும் பாதுகாப்புக் கருதி அகதிகளாக தமிழகம் செல்வதற்காக ஆயிரக்கணக்கானோர் தலைமன்னாருக்கு தினசரி வந்து குவிகின்றனர்.

22.08.90 வீரகேசரி

இந்நாட்டு சனத்தொகையில் மலைநாட்டு மக்களாகிய நாம் 5 சதவீதமே இருக்கின்றோம். எனவே என்றைக்குமே நாம் இந்த நாட்டை ஆள முடியாது—தொண்டமான்

இந்தியா செல்வதற்காக பள்ளிமுனைப் பகுதிகளில் வள்ளங்களில் வந்திறங்கும் அகதிகள் தலைமன்னார் கிராமத்தை வந்தடைய சுமார் 22 மைல்கள் கால்நடையாகச் செல்கின்றனர்.

இலங்கை போக்குவரத்துச் சபை மக்கள் மயமாக்கப்படுவதை எதிர்க்குமுகமாக காலியில் நடந்த எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்த ஊர்வலத்தை பொலிசார் கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்து கலைத்தனர்.

23.08.90 வீரகேசரி

மட்டக்களப்பிலிருந்து 7 இ.போ.ச பஸ்களில் கொழும்புக்கு வந்த பயணிகளில் மொத்தம் 35பேர் வழியிலுள்ள வாழைச்சேனை, வெலிக்கந்தை தடை முகாம்களில் வைத்து முஸ்லீம் ஊர்க்காவற்படையினராலும், இராணுவத்தினராலும் இறக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

காரைதீவில் வெட்டுக் குத்துக் காயங்களுடன் 2 சடலங்கள் ஒதுங்கியுள்ளன.

கம்புறப்பிட்டிய பொலிஸ் பகுதியில் உடலற்ற இளைஞனின் தலையொன்று—பெயர்ப் பலகையில் தொங்கவிடப்பட்டுள்ளது.

தங்காலை பொலிஸ் பகுதியில் 3 இளைஞரின் சடலங்கள் எரிந்து கொண்டிருப்பதாக அங்கிருந்து வந்தோர் தெரிவித்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுகஸ்தோட எல்கடுவ தனியார் - தோட்டமொன்றில் 5 பேரைக்கொண்ட தமிழ்க் குடும்பம் ஒன்றை இனந் தெரியாத நபர்கள் வெட்டிக்கொலை செய்து பாழடைந்த கிணற்றில் போட்டுள்ளனர்.

இராணுவத்தினர் நாட்டைக் காக்க வேண்டும் என்ற உன்னத நோக்குடன், தியாகத்துடன் செயற்பட்டு வருகின்றனர். ஆனால் அரசாங்கம் கூறுவதைப்போன்ற வெற்றிப் பெருமிதம் கொள்ளும் அளவு நிலைமை இல்லை. எமது படைகள் அங்கு மிகவும் சிரமப்படுகின்றன. படையினருக்கென விமானங்கள் இல்லை - சிறிமாவோ

23.08.90 ஐலண்ட்

ஒரு கிழமையில் 1,000 புலிகளும், 680 பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர் - பாதுகாப்பமைச்சர்

24.08.90 வீரகேசரி

யுத்தத்தில் பொதுமக்கள் கொல்லப்படுவதை முற்றாகத் தடுக்க முடியாது. கிட்லரின் யுத்தத்தில் 5கோடிப் பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் 80 சதவீதத்தினர் பொதுமக்களே - பாதுகாப்பமைச்சர்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எனக் கூறிக்கொண்டு யாழ்ப்பாண மக்கள் மீது குண்டுகளைப்போட்டு அவர்களை அழிப்பதை அரசாங்கம் உடனே நிறுத்தவேண்டும். குண்டுகள் போடுவதன் மூலம் எமது மக்களை வென்றெடுக்க முடியாது - பாராளுமன்றத்தில் மாவை சேனாதிராசா

அகதி முகாம்களில் மக்கள் உணவு, மருத்துவப் பொருட்கள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வந்தாறுமூலை பல்கலைக்கழக அகதி முகாமில் 26 குழந்தைகள் நோயினால் இறந்துள்ளன - பாராளுமன்றத்தில் பிரின்ஸ்

கொழும்புத்துறைப் பகுதியிலிருந்து தமிழகம் நோக்கிப் புறப்பட்ட அகதிகள் படகு மீது கெலி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதில் 2 சிறுவர்கள் உட்பட 4பேர் உயிரிழந்தனர். 7பேர் கடும் காயங்களுக்குள்ளானார்கள்

யாழ் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் வண்டியும் யாழ் போதனா வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டியும் விமானத் தாக்குதலுக்கிலக்காகின.

ரூபவாகினி, வானொலி, போஸ்டர்கள் என்பவற்றில்தான் யுத்தத்தில் வெற்றி ஈட்டமுடியும். உண்மையில் இந்த யுத்தத்தில் எவருக்குமே வெற்றி கிட்டாது. அப்பாவி மக்கள் அழிவதும், அல்லல்படுவதும்தான் மிச்சம் - ஐ.சோ.மு திசநாயக்க

இன்று தேசியப் பத்திரிகைகள் எல்லாமே இனவாதத்தைத் தூண்டுவதாகவே உள்ளன - சுரவீர

போட்டி போட்டுக்கொண்டு கொலைகள் நடைபெறுகின்றன. இன்று 50பேர் கொலை செய்யப்பட்டால் அது பரவாயில்லை. நேற்று 200பேர் செத்தார்கள்தானே என ஒருவிதத் திருப்திபட்டுக்கொள்ளும் கேவலமான நிலை நாட்டில் இருக்கிறது. இந்த நாட்டை யார்தான் ஆட்சி செய்தாலும் மக்கள் உயிருடன் இருப்பார்களோ என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. மோசமான கட்டத்தை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம் - சபாநாயகர் காமினிபொன்சேகா

25.08.90 வீரகேசரி

திருகோணமலையில் 37 அப்பாவித்தமிழர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் நிலைமை குறித்து இதுவரை தெரியவில்லை. இச் சம்பவத்தைத் தொடர்ந்து அலஸ் தோட்டப்பகுதியில் சிலரின் உடல் எரிக்கப்பட்டநிலையில் கிடந்ததைப் பஸ்ஸில் சென்ற பயணிகள் கண்டுள்ளனர். கொலையுண்டு எரிக்கப்பட்டவர்கள் படையினரால் கைது செய்யப்பட்டவர்களாக இருக்கலாம் - ஈ.பி.ஆர்.எல்.எவ்

ரோகண விஜேவீரவை அழித்ததைப் - போல பிரபாகரனையும் அழிக்கப்-

www.tamilarangam.net

அரசாங்க அதிபர் பிரிவுகளில்
ாகித்திருக்கிறார்கள். சடலங்கள்
மீதம் தன்டுப் பிரசுரங்களை ஒட்டியிரு
க்கிறார்கள். இதனை காத்தான் குடிப்
படுகொலைகளையொத்த சம்பவங்கள்
கிழக்கு மாகாணத்தின் ஏனைய பகுதிக
ளிலும் இடம்பெறக்கூடிய சாத்தியக்கூறு
கள் இருக்கின்றன - மு.கா. தலைவர்

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்
த உணவுத் தட்டுப்பாடு நிலவி வருவத
ல் ஊற்றுப்புலம் போன்ற மிகவும்
பின்தங்கிய பகுதிகளில் வசிப்பவர்கள்
அல்லிப்பூ விதைகளையும், குளங்களில் உ
ள்ள தாமரைக் கிழங்குகளையும்தோண்
டியெடுத்து, அவித்து உண்டுவருகின்றனர்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற இராணு
வ நடவடிக்கைகள் காரணமாக இங்கு
பல வருடங்களாக இயங்கிவந்த 2
அநாதை இல்லங்களும் பாதிக்கப்பட்டுள்
ளன. பொம்பர் தாக்குதலுக்கு இலக்-
கானதால் 5பிள்ளைகள் காயமடைந்த
ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளன
ர்.

புலிகள் தாம் நடத்தும் கொலைகளை
மறைமுகமாகச் செய்வதற்கு 'செம்ப
டை 90' என்ற ஓர் புதிய இயக்கத்
தை உருவாக்கியுள்ளதை மட்டு நகர்
புலிகளின் பொறுப்பாளர் கரிகாலனின்
... தெளிவாகக் காட்டுகிறது -

தேடியழிப்போம். அவர்களை நாம்
கைது செய்யப் போவதில்லை. அவர்க
ள் இந்த நாட்டில் வாழ்வதற்கு பாத்
தியதை கொண்டவர்கள் அல்லர் -பா
துகாப்பமைச்சர் ரஞ்சன்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்
ந்த 9 எல்லைக் கிராமங்கள் அம்பா
றை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டுள்
ளன.

09.08.90 வீரகேசரி

வடக்கு-கிழக்குச் சம்பவங்களின் விளை
வாக நிதி நெருக்கடியை எதிர்நோக்
குகிறோம் - பிரதமர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும்
32 அகதி முகாம்களில் 1இலட்சத்து
4,360பேர் தங்கியுள்ளனர். இடம்பெ
யர்ந்தோரின் மொத்த எண்ணிக்கை :
1,51,460

பாராளுமன்றத் தூதுக்குழு சமாதான
ம் நாடி புதுடில்லிக்குச் சென்றவேளை
அமைச்சர்கள் ரஞ்சனும், மன்றும் யுத்
தத்திற்கு ஆயுதங்கள் தேடி மத்தியகிழ
க்கிற்குச் சென்றார்கள் - சு.க.எம்பி

அம்பாறை மாவட்டம் உகனையிலுள்ள
கிராமத்திலும், பொலனறுவை மாவட்ட
த்தில் பல ஒன்றியமான இரு தாக்குத
ல்களில் பெண்கள், குழந்தைகள் உட்பட
51 சிங்கள மக்கள் கொல்லப்பட்டுள்
ளனர். இத் தாக்குதல்களைப் புலிகள்
நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்
... யாக -

கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் இடம்பெற்றுவரும் மோதல்க
ளையடுத்து 325 அகதி முகாம்களில்,
மூன்றரை இலட்சம் பேர் அகதிகளாகி
யுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் சிவிலியன்களுக்குஎதி
ரான தாக்குதல்களை நிறுத்துவதற்கா
க இலங்கையில் ராஜதந்திர ரீதியாக
தலையிட இந்தியாவைக் கோரியுள் -
ளோம். இலங்கை இதை விரும்பினாலும்
விரும்பாவிட்டாலும் இந்தியாவுக்கு இல
ங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்
தது. கருதலான பிரதேச சுயாட்சிக்கு
நாம் இணக்கம் காணத் தயார். இல
ங்கை ஒரு சமஷ்டி அமைப்பை முன்
வைக்குமாயின் அதனை நாம் பரிசீலிக்
கத் தயார் - அன்டன் பாலசிங்கம்

காத்தான்குடிப் பள்ளிவாசல்களில் நட
ந்த முஸ்லீம் மக்களின் படுகொலைகளு
க்கு இந்த அரசாங்கமே முழுப்பொறு
ப்பு ஏற்கவேண்டும். பசியும், பட்டினியும்
நாடு முழுவதிலும் வளர்ந்த செல்வம்
யூ என்.பி. ஆட்சியில் முஸ்லீம்களுக்கோ
தமிழர்களுக்கோ, பொதுவாகப் பரந்
துபட்ட மக்களுக்கோ விடிவு இல்லை.
இந்த நிலையிலிருந்து மீட்சியடைவதற்கு
ஒரே வழிதான் உண்டு. இன்றைய அர
சை தூக்கி எறிவதுடன் தேசிய இனப்
பிரச்சினையை சுயநிர்ணய உரிமை, சு
யாட்சி, சமத்துவம் என்ற அடிப்படையி
ல் தீர்க்கவல்ல தொழிலாளர், விவசா

... டைசுகள் வடக்கு, கிழ
க்கு இணைந்த மாகாண அமைப்பு, முஸ்
லீம் மக்களுக்கு தனியான சுயாட்சி ...





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ந்துள்ளது. இதற்காக புளொட் உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் அரசிடம் ஒப்படைக்கப் படவிருக்கிறது.

காரைதீவு அகதிகள் முகாமில் 8குழந்தைகள் பட்டினியால் இறந்துள்ளன.

20.08.90 வீரகேசரி

யாழ் குடாநாட்டில் உக்கிரமான விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களும், கெலி தாக்குதல்களும் பரந்துபட்ட அளவில் நடைபெறுவதன் காரணமாக எப்படியும் உயிர் தப்பினால் போதும் என்ற மனோபாவத்துடன், குழந்தை குட்டிகளுடன் பருத்தித்துறை காவலூர் கடல் மார்க்கமாக தென்னிந்தியாவிற்கும் வவுனியா மார்க்கமாக கொழும்புக்கும் மக்கள் பெருமளவில் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

கிளிநொச்சி, வாழைச்சேனைப் பகுதிகளிலுள்ள பல அகதி முகாம்களில் உணவு பற்றாக்குறை, மருந்துப் பற்றாக்குறைகள் ஏற்பட்டுள்ளன. இதனால் 3 குழந்தைகள் இறந்துள்ளன.

ஒவ்வுதியக் கொடுப்பனவுகள் வடபகுதியில் இன்னும் வழங்கப்படாததினால் ஓய்...

ள் திரும்பிவரும்போது அத்தியாவசியப் பொருட்களை ஏற்றிவருகின்றன. இவை வடக்கின் ஒருசில இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றன.

இராணுவ நடவடிக்கைகள், மோதல்கள் காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கை முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் உணவுப்பஞ்சம் அதிகரித்துள்ளது. பசிக் கொடுமை தாளாது உதயநகர் திட்டத்தில் 9பேர்கொண்ட ஒரு குடும்பம் அரளிவிதையை அரைத்து உண்டு தற்கொலை செய்ய முயன்றதில் 2 குழந்தைகள் பலியாகியுள்ளன. இதேபோல் பசிக் கொடுமையால் குடும்பஸ்தர் ஒருவர் வட்டக்கச்சி அகதி முகாமில் உயிரிழந்துள்ளார்.

இந்தியக் கடற்படையின் பிரிவு ஒன்று இராமேஸ்வரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து தமிழகத்திற்குவரும் அகதிகளின் பாதுகாப்பு, கடலில் மீன் பிடிக்கச் செல்லும் இந்திய மீனவர்களின் பாதுகாப்பு என்பவற்றுடன் இலங்கையில் நடைபெறும் நிலவரங்கள் அவதானிப்பு என்பவை இக் கடற்படை பிரிவின் பணிகளாக அமைந்துள்ளன.

மோசடியான முறையில் நிறைகள் குறைத்து ஏமாற்றவும் செய்கிறார்கள். சங்கக் கடைகளில் விற்பனையாகாது தேங்கிக் கிடக்கும் பொருட்களெல்லாம் அப்பாவித் தொழிலாளர்களின் தலையில் கட்டிவிடப்படுகின்றன- செங்கொடிச் சங்கப் பொதுச்செயலாளர் இராமையா.

பொலனறுவை அகதி முகாமில் சின்னம்மையால் 62 முஸ்லீம் அகதிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு டெங்கு காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவும் அபாயமும் தோன்றியுள்ளது.

யாழ்ப்பாணம், பாசையூர் புனித அந்தோனியார் பாடசாலை, சென் பற்றிக்ஸ் கல்லூரி, தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானம் ஆகிய இடங்களில் உள்ள அகதிகள் முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டு வீச்சு, சுட்டிலறி செல் தாக்குதல்களில் 18பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 50க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

21.08.90 வீரகேசரி

மதவாச்சி ரயில் நிலையப் பகுதிகளில்

...உதவி ... விநியோ...

...நாட்டில் நாளாந்தம் விமானத் தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. 7 விமானங்கள் தாக்குதலில் ஈடுபடுகின்றன.

...நிலைமைதான்... நல்ல ஒரு ...கிய தேவை. சந்ததி சந்ததியாக நாம் மலைநாட்டில் வாழ்ந்து வந்தாலும் கூட நமக்கென்று அரை அங்குல நிலம் கூடச் சொந்தமாக இல்லை. நமக்கென்று மிஞ்சியுள்ள தவரெலியா பிரதேசத்தில் கூட நாம் அழிந்துகொண்டுதான்

...கொல்லப்பட்டுள்ளனர் ... 60 செல்வநாயகபுரத்தில் கொல்லப்பட்டுள்ளனர். 23 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். சித்தாறில் 45 பேர், சிலன்வாடியில் 12பேர், தம்பலகாமத்தில் 75பேர் கொல்லப்பட்டுள்ளனர். திருகோணமலையில் தமிழ்ப்பெண்கள் கைது செய்யப்பட்டு மார்புக்கச்சைகள் அவிழ்க்கப்பட்ட நிலையில் இராணுவமுகாமுக்கு அழைத்...



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லங்காத் தோட்டத் தொழிலாளர் சங்க அமைப்புச் செயலாளர் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்தார்.

பெலியத்தை பொலிஸ் பகுதியில் இனந் தெரியாத 2இளைஞர்களின் சடலங்கள் எரிந்தநிலையில் காணப்பட்டன.

ஜனாதிபதி ஆணையிட்டால் நான் சந்திர மண்டலம் செல்லவும் தயாராக உள்ளேன்-தகவல்துறை இராஜாங்க அமைச்சர்.

04.08.90 ஐலண்ட்

சுரோஸின் மலையக உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கு அரசியலுள் தங்களை இணைத்துக் கொள்ளாமல், மலையகத்திற்காக தனித்து இயங்கவேண்டும் எனப் பாலகுமார் தங்களைப் பணித்திருப்பதாக ஈ.ஐ.மு. எம்.பி. தெரிவித்துள்ளார்.

04.08 90 வீரகேசரி

குளியாப்பிட்டி மகா அகரவத்தையில்3 பேர் இனந்தெரியாதவர்களினால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

வாழைச்சேனைப் பகுதியில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டதன் பின்னர் அங்குள்ள தமிழ் மகா வித்தியாலயக் கட்டிடத்தில் சுமார்3,000பேர் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

வடக்கு,கிழக்கு யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கு புனர்வாழ்வளிக்க இன, மத, பேதமின்றி உதவவும், நன்கொடை வழங்கவும் தயாராகவுள்ளோம். அதேவேளை யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் எந்தவொரு தரப்பினருக்கும் துப்பாக்கிகள் வெடிமருந்துகள் வாங்கி மக்களை அழிக்கத் துணைபோக முடியாதென மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் பாதுகாப்பு நிதிக்காக தோட்டத் தொழிலாளர்களிடமிருந்து நிதி திரட்ட ஒத்துழைப்பு நல்குமாறு கோரி தோட்டத்துறை அனுப்பியுள்ள கடிதத்திற்குப் பதிலளித்துள்ளார்.

05.08.90 வீரகேசரி

காத்தான்குடியில் மீரா பள்ளிவாசலிலும், ஹுசைனியா தைக்கா பள்ளிவாசலிலும் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களை நோக்கி இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய கோஷ்டியினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 120பேர் கொல்லப்பட்டனர். 65 பேர் காயமடைந்தனர்.

காத்தான்குடித் தாக்குதல்களை புலிகள் இயக்கத்தினரே மேற்கொண்டதாக நேரில் கண்ட சாட்சிகள் உண்டு-மு.கா தலைவர்

சவூதி அரேபியாவில் உள்ள இலங்கையர்களிடமிருந்து தேசிய பாதுகாப்புநிதிக்கு அன்பளிப்புகள் பாதுகாப்பு அமைச்சுக்கு நேரடியாக அல்லது சவூதியிலுள்ள இலங்கைத் தூதரகம் மூலமாக அனுப்பி வைக்கப்படுவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

06.08.90 வீரகேசரி

காத்தான்குடிச் சம்பவங்கள் எமக்கு அதிர்ச்சியையும், வேதனையையும் தந்துள்ளன. மனித உயிருக்கு மதிப்பளிக்காது அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுவது உடன் நிறுத்தப்படவேண்டும்-மட்டக்களப்பு ஆயர்.

கிழக்கிலுள்ள சகல முஸ்லிம் கிராமங்களிலும் ஆயுதம் தரித்த ஊர்க்காவற் படையினரை கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயிற்றப்பட்டுள்ள 1,000 முஸ்லிம் ஊர்க்காவற்படையினர் காத்தான்குடி, புத்தளம், அம்பாறை, அநுராதபுரம் ஆகிய இடங்களில் உடனடியாகக் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் இதுவரை 35பேர் கைதாகியும், காணமல் போயுள்ளதாகவும் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக சமாதானக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

என்னிடம் கடமையுணர்வு இருப்பதனால் நான் ஒருவனைப் பாராளுமன்றத்திலிருந்துகொண்டு மலையக மக்களின் பிரச்சினைக்காக வாதிடுவதுடன், அவர்களுக்குத் தேவையான உரிமைகளைப் பெற்றும் வருகிறேன் -தொண்டமான்

இலங்கையிலிருந்து பெருமளவில் அகதிகளாகத் தமிழ் மக்கள் தமிழகத்திற்கு வருவதைத் தடுக்கும் வகையில் இலங்-

www.tamilarangam.net

கையிலேயே அகதிகள் முகாம் திறக்கபடுவது குறித்து இந்திய அரசு ஆலோசனை நடத்திவருகிறது.

07.08.90 வீரகேசரி

காத்தான்குடிப் பள்ளிவாசல்களுள் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது சற்றுமே எதிர்பார்க்கப்படாததொன்று. தொழுகை நடத்திக் கொண்டிருந்த அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்திய சம்பவம் உலகிலேயே இதுதான் முதற்தடவையாகும்.

காத்தான்குடிக் கொலைச் சம்பவங்களுக்கு துக்கம் தெரிவிக்குமுகமாக முஸ்லீம் பகுதிகளில் கர்த்தால் அனுஸ்டிக்கபடுகிறது.

ஈரோஸ் உறுப்பினர்கள் இருவர் கொழும்பு புறக்கோட்டையில் வைத்து இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் 18 முஸ்லீம் விவசாயிகள் கொல்லப்பட்டுக் கிடந்ததாக மு.கா.உப தலைவர் தெரிவித்துள்ளார். அக்கரைப்பற்றிலிருந்து 6வது மைல் கல்லில் 6 சடலங்கள் நெற்றியில் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக்காணப்பட்டதாகவும், சடலங்களுக்கு அருகில் அம்பாறை மாவட்டத்திலிருந்து முஸ்லீம்கள் இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் வெளியேறிவிட வேண்டும் என்று குறிப்பு ஒன்று போடப்பட்டிருந்ததாயும் அவர் தெரிவித்தார்.

கல்முனை, காரைதீவு, அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய பகுதிகளில் தமிழ் மக்கள் ஏராளமாகக் கடத்தப்பட்டிருக்கின்றனர். இதற்கான குற்றச்சாட்டுக்கள் முஸ்லீம்கள் மீதுசுமத்தப்படுகின்றன. அதேபோலவே சம்மாந்துறை, ஒட்டமாவடி, காத்தான்குடி போன்ற இடங்களில் பல முஸ்லீம் அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். இதற்கான பழி தமிழர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது —டெலோ எம்.பி. திவ்வியநாதன்

இன்று வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதொன்றல்ல. உலகநாடுகளில் இன்று மேற்கொள்ளப்பட்டுவரும் பயங்கரவாதத்திற்கு எதிரான ஓர் நடவடிக்கையே அங்கும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது – இ.தொ.க. பொதுச் செயலாளர் செல்லச்சாமி

புலிகளின் இராணுவ, அரசியல் தலைமைகளினால் முஸ்லீம்கள் மீதான படுகொலைகளையும், அடாவடித்தனங்களையும் நிறுத்த முடியாமற் போனதிலிருந்து அப்பாவி மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இப் படுகொலைகள் புலிகளின் உயர்மட்டத்திலேயே திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டது என்பது நிரூபணமாகிறது– பாமிஸ்

07.08.90 ஐலண்ட்

காத்தான்குடியில் அப்பாவி முஸ்லீம்மக்கள் புலிகளால் கொல்லப்பட்டதையடுத்து, இலண்டனிலும், அமெரிக்காவிலுமுள்ள புலிகளின் அலுவலகங்களைக் குண்டுவீசித் தாக்கும்படி ஈரானிலும், லெபனானிலுமுள்ள 'ஹிஸ்புல்லா' இயக்கம் அறிவித்திருப்பதாக முஸ்லீம் ஒருவர் ஐலண்ட் பத்திரிகைக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்.

08.08.90 ஐலண்ட்

அம்பாறை மாவட்டத்தில் புலிகள் முகாமிலிருந்து ஏராளமான விசக்குடுவைகளை எஸ்.ரி.எப். கைப்பற்றியுள்ளது.

08.08.90 வீரகேசரி

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு கொழும்பிலிருந்து இராணுவப் பயிற்சி பெற்ற பிளட்டூன் அணியைச் சேர்ந்த 100க்கும் அதிகமான பொலிசார் அனுப்பப்படுகின்றனர்.

அநுராதபுரத்தில் 1 மாதகாலமாக அகதிகளாக உள்ள வடக்கு, கிழக்கு முஸ்லீம்கள் பல்லாயிரம் பேருக்கு 15 நாட்களுக்குமேல் உணவுப் பங்கீட்டுப்–பொருட்கள் வழங்கப்படவில்லையென்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்பதாக தமிழ் பேசும் முஸ்லீம்கள் ஈழத்திலிருந்து வெளியேற வேண்டும் என உத்தரவிடும் துண்டுப் பிரசுரங்களைப் புலிகள் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேன

www.tamilarangam.net

போவதாக அமைச்சர் ரஞ்சன் கூறினார். அப்படிச் செய்ய முடியுமானால் நல்லது. அதை நாம் ஆதரிப்போம்-சிறிமாவோ

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களின் பிரச்சினைகளை தனியே முஸ்லிம்களின் பிரச்சினையாக மட்டும் கருதி அதற்குத் தனியே தீர்வு காண முற்படவேண்டாம்-ஈ.பி.ஆர்.எல்.எவ்

இந்த யுத்தம் பயங்கரவாதப் புலிகளுக்கு எதிராக,இந்த நாட்டின் இறைமையை,ஆதிபத்திய உரிமையை, நிலப்பிரதேச உரிமைப்பாட்டினை பாதுகாப்பதற்காக நடந்துகொண்டிருக்கிறது -டெலோ எம்.பி கருணாகரன்

27.08.90 வீரகேசரி

வடக்கில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் விமானக்குண்டுத் தாக்குதல்களை உடன் நிறுத்தி அப்பாவி மக்களின் கொலைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறும்,வடபகுதி வாழ் மக்கள் ஒட்டுமொத்தமாக பட்டினிச்சாவை எதிர்நோக்குவதால் உடனடியாக விமானம் மூலம் அங்கு உணவுப் பொட்டலங்களை போடுமாறும் சிங்கள,தமிழ்,முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும்-20 அரசியற் கட்சிகள் ஒன்றுகூட்டாக அரசிற்கு விண்ணப்பித்துள்ளன.

அரசுக்கும்,எல்.ரி.ரி.ஈ.க்கும் இடையிலான மோதலில் முடிவுக்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை.இதேவேளையில் சமாதானத்தையும்,அமைதியையும் விரும்பும் சாதாரண குடிமக்கள் உணவு,மருந்து,வீடு வாசல், ஆறுதல் எதுமின்றி தாங்கொணாத் துயரத்திற்கு ஆளாகித் தவிக்கிறார்கள்.யாழ்ப்பாணத்தில் உணவுநிலை ஆபத்தான இடத்திற்கு வந்துவிட்டது.தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 352 முகாம்களில் 314430 அகதிகள் தங்கியிருக்கின்றனர். ஆகவே இந்நாட்டு அனைத்து மக்களையும்,சமாதானத்தினை விரும்பும் இலங்கையர்களையும் கருத்திற்கொண்டு பாரபட்சமற்ற அல்லது சர்வதேச கண்காணிப்புள்ள யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்ய வேண்டும் -யாழ் மாவட்ட நீதி,சமாதான அபிவிருத்தி ஆணைக்குழு

குண்டுகளைப் போடுவதன் மூலம் புலிகளை அழித்துவிட முடியாது.தமிழ் மக்களால்தான் புலிகளை அழிக்க முடியும் அதற்காக ஒவ்வொரு தமிழரும் ஆயுதங்களைக் கையிலெடுத்துக்கொண்டு புலிகளைத் தேடி வேட்டையாடவேண்டும் என அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது.புலிகளை இல்லாமற் செய்ய வேண்டுமென தமிழர்கள் உணரும் வகையில் அவர்களது அபிலாசைகளுக்கு மதிப்பளித்து பிரச்சினைகளுக்கு நியாயபூர்வமான தீர்வு ஒன்றைக் காணவேண்டும் -மு.கா. தலைவர்

கடந்த காலங்களில் இரத்தினபுரி மாவட்டத்தில் காணாமற்போனவர்களது பெற்றோர் ஒன்றிணைந்து 'காணமற் - போனோரின் பெற்றோர் சங்கம்'என்ற புதிய அமைப்பொன்றினை உருவாக்கியுள்ளனர்.

28.08.90 வீரகேசரி

கண்டியில் உள்ள வீடொன்றில் தங்கிப்படித்துக்கொண்டிருந்த சாவகச்சேரியை சேர்ந்த 5 மாணவர்கள் கறுப்பு அங்கியணிந்திருந்த நால்வரால் ஜீப்பில் கொண்டு செல்லப்பட்டனர்.அதன் பின் அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

பொலனறுவை மாவட்டத்திலுள்ள ஓர் அகதி முகாமுக்குள் இரவில் நுழைந்த இனந் தெரியாதோர் சில முஸ்லிம்களை வெட்டியதால் அகதிகள் மத்தியில் அச்சமேற் பட்டுள்ளது.

10 தினங்களாக உண்ண எதுவித உணவுமில்லாத நிலையில் பளையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12பேர் நஞ்சருந்தித் தற்கொலை செய்துள்ளனர்.

சர்வகட்சி மகாநாட்டைக்கூட்டி ஜனாதிபதி பெரும் பிரச்சாரங்களைச்செய்து வருகிறார்.ஆனால் இதிலும்கூட தமிழ் மக்களுக்கான தீர்வை முன்வைக்க அரசு தயாரில்லை- செங்கொடிச் சங்கத்தலைவர் டிநு.குணசேகர

29.08.90 வீரகேசரி

வவுனியா நகரப் பகுதியிலுள் 15வயதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ற்குட்பட்டவர்களும், 40 வயதிற்கு மேற்பட்டவர்களுமே போய் வரலாமென்ற புளொட் அறிவித்துள்ளது.

பொகவந்தலாவையில் உள்ள கடைக்குள் இருவரது சடலங்கள் கயிற்றில் கழுத்துகள் நெரிக்கப்பட்டுக் காணப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் வயிற்றோட்டம் காரணமாக இதுவரை 32 குழந்தைகள் உட்பட 40இற்கும் மேற் பட்டோர் உயிரிழந்துள்ளார்கள்.

வட்டக்கச்சிப் பகுதியில் கெலி ஒன்று செல் தப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் உழவுயந்திரம் ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த 22பேர் கொல்லப்பட்டனர்.

30.08.90 வீரகேசரி

அச்சம் காரணமாக இந்தியா செல்ல மருத் திருப்பதியில் 12ஆயிரம் அகதிகள் வந்து தங்கியுள்ளனர்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தினால் ஏற்பட்டு வரும் அனர்த்தங்கள் மனிதகுலமே அருவருக்கத்தக்கதாகும். அர்த்தமற்ற குரோதத்துடன் நடைபெற்றுவரும் இந்த பலப்பரீட்சையில் அப்பாவிப் பொதுமக்களின் எதிர்காலமே நாசமாக்கப்படுகிறது. இத னைத் தன்மானப் பிரச்சினையாகவோ அன்றி வீரத்தின் பலப்பரீட்சையாகவோ கருதாமல் சமூகத்தை அழிவிலிருந்து காப்பாற்ற உடனடியாக யுத்தத்தை நிறுத்துவதே சம்பந்தப்பட்ட சகலரினதும் கடமையாகும். சிறுபான்மை தமிழ்மக்கள் என்ற ரீதியில் வடக்கு-கிழக்கில் இடம் பெறும் அழிவுகளை ஜீரணிக்கமுடியாமல் மனம் வெதும்பும் மலையக மக்களோடு இணைந்து மலையக மக்கள் முன்னணி தனது மனக்குமுறலை வெளிப்படுத்துகிறது - பெ.சந்திரசேகரன்

தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி வழங்கும் திட்டத்தின் கீழ் எல்கடுவகுறகல அரச தோட்டத்தில் 15 ஏக்கர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணி சுவீகரிக்கப்பட்டுள்ள போதிலும் மூவர் மட்டுமே காணி பெறத் தகுதியுள்ளவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். மேற்படி தோட்டத்தில் காணிபெற்றுக்கொள்ள அத்தோட்டத்தில் வசித்துவரும் 200 தொழிலாளர்கள் விண்ணப்பித்திருந்தனர். இதே சமயம் லேவெலிஅம்ப, கபுலித்த போன்ற கிராமப்புறங்களில் வசித்துவரும் சிங்கள மக்கள் பலரும் அத் தோட்டத்தில் காணி பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

31.08.90 வீரகேசரி

1991ஆம் ஆண்டு வரவு, செலவுத் திட்டத்தில் கன்டுவிழும் தொகை ரூபா - 67,000 மில்லியன்.

இன்றைய நிலையில் அரசாங்கத்தை எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள் பற்றிக் கவலை தெரிவித்த ஈ.பி.டி.பி.னாது குழு வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு உடனடியாக அரசியல் தீர்வொன்றைக் காண்பதில் ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் ஒத்துழைப்பு நல்கத் தமது கட்சி தயாராயுள்ளதாக உறுதியளித்தனர்.

எத்தனை வருடங்கள் கடந்தும் அரசால் வடக்கு-கிழக்கு மக்களுக்கான தீர்வை முன்வைக்க முடியவில்லை. இவற்றை வெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும் பொழுது தமிழ் பேசும் மக்களுக்குச் சரியான தீர்வு, சமாதானம், பேச்சு-வார்த்தை, அதிகாரப்பரவலாக்கமென்ற கூறுபவைகள் எல்லாம் வெறும் கண்துடைப்பு எனச் சந்தேகிக்க வேண்டியுள்ளது - ஈ.பி.ஆர்.எல்.எவ்

அரசாங்கம் புலிகளோடு யுத்தம் நடத்துவதாகக் கூறிக்கொண்டு எடுக்கும் நடவடிக்கைகள் முழுத்தமிழ் மக்களையுமே அழிக்கும் நடவடிக்கையாக அமைந்தது-தோட்ட தொழிற் சங்கக் கமிட்டி

இலங்கை அரசின் ஆயுதப்படைகள் கடந்த காலங்களில் அரசியலில் எதிர்க் கருத்துகள் கொண்டவர்களை அழிக்கும் முயற்சியில் ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்றும், ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை "காணமற் போனவர்கள்" ஆக்கியும் வைத்துள்ளது. இவ்வாறு, இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான சர்வதேசப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள சர்வதேச மனித உரிமைச் சங்கம் தெரிவித்துள்ளது. இச் சங்கம் மேலும் தெரிவித்ததாவது: ஆளும் யூ.என்.பி. யினால் நேரடியாக வழிநடத்தப்படும் கொலைப்படைகள் சீருடையிலும், சீருடையில் இல்லாமலும் சித்திரவதை செய்தும், நேரடியாகவும் பல அப்பாவி மனிதர்களைக் கொன்று குவித்துள்ளன. 1988,1989இல் ஜே.வி.பி.க்கு எதிரான தாக்குதல்களிலும், தற்போது எல்.ரி.ரி.ஈ.க்கு எதிரான தாக்குதல்களிலும் இக் கொலைப்படைகளும், இராணுவம், பொலிஸ் ஆகியனவும் ஆயிரக்கணக்கானோரைக் கொன்றுள்ளதுடன், ஏராளமானவர்களை "காணமற் போனவர்கள்" பட்டியலில் இடம்பெற வைத்துள்ளன.

(ரா-நி)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலங்கள் நிறையுமா?

சமாதானத் தேவாரங்கள்
சமர்ப்பணமாகும் சந்நிதியில்
உபயகாரரின் உருவகங்கள்
காலச் சக்ரத்தில் மாறலாம்.

திட்டங்கள் என்று பல
பால், பழ அபிசேகங்கள்
மந்திரம் கூறும் அர்ச்சகரின்
வசதிகண்டு பெருகலாம்.

வரத்தைக் கேட்டுவிட்டு
வாழ்க்கையை எதிர்பார்க்கும்
வரண்டுபோன பக்தர்களின்
எதிர்காலம் விடியுமா?

மண்மூட்டை மேடைகளுள்
மார்க்கத்தைத் தேடுகின்ற
கொள்கைக் குன்றங்களின்
மனக்குமுறல் இடியுமா?

எக்காளக் கூட்டங்களின்
எமலோகப் பாதைகளில்
சயனித்த தமிழர்களின்
பயணங்கள் மறையுமா?

கார்கால மேகங்கள்
காத தூரம் ஓடிப்போய்
உதயத்தை முன்தள்ளும்
காலங்கள் நிறையுமா?

—மு. இராஜன்—

www.tamilarangam.net





(யாழ்நகரில் 75-85 அங்கவி ஊர்வலம்)

நூற்றுக்கணக்கான சிறுவர்கள் மூளைக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். 5வயதிற்குக் குறைந்த சிறுவர்களில் 75 வீதமானோர் போசாக்குக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தின் தற்கொலை வீதம் உலகிலேயே ஆகக் கூடியதாகும்.

ராஜனி இறந்ததும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் - இவர்களில் பெரும்பாலானோர் மாணவர்களும், ஏழைகளுமாவர் - அச்சுறுத்தலையும் மீறி யாழ்ப்பாணத்தில் மௌன ஊர்வலம் சென்றனர்.

ஆனால் இதுபோன்ற உணர்ச்சி வெளிப்பாட்டு நிலைமைகளை 12 வயதுச் சிறுவர்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

ஆனையிறவில் இவர்கள் ஒவ்வொரு வாகனத்தையும் நிறுத்தி தங்களின் எதிரிகளைத் தேடுகிறார்கள். தலையாட்டிகள் தங்களுக்குத் தெரிந்த புலிகள் ஆதரவாளர்களை இனங் கண்டதும் தலையாட்டுகிறார்கள்.

இந்தத் தொடர்ந்த அணிவகுப்பில் ஒவ்வொரு நாளும் எத்தனைபேர் காணமல் போகிறார்கள் என்று ஒருவருக்கும் தெரியாது.

14 வயதுச் சிறுவர்களை கூட இயக்கத்தில் சேரக் கோரும் புலிகளின் சுவரொட்டிகள்

www.tamilarangam.net

"புலிகள் அழுவதில்லை"என்ற வரிகளைத் தாங்கி நிற்கின்றன.

எல்.ரி.ரி.ஈ. பிரமுகர்கள் புலிகளின் அரசியல், இராணுவப் பயிற்சிக்கு 13 அல்லது 14 வயது எல்லைக் கட்டுப்பாடு இருக்கிறது என்று கூறுகிறார்கள்.

ஆனால் தனது படைப்பிரிவின் களப் பயிற்சிகளை ஒருமொனிற்றர் கொப்பியில் பாடசாலை, திகதி, பெயர், பாடவாரியாகப் பதிவு செய்து வைத்திருக்கும் ஒரு புலிகள் பிரிவின் கொமாண்டர் மிகவும் சுளுவாக

ஒரு 12 வயதுச் சிறுவன் ஒரு கிளாஸ்னிக்கோவ் ஆயுதத்தைக் கழற்றிப் பூட்டுவதைப் பெரும் மகிழ்ச்சியோடு காட்டுகிறார்.

ஒரு கடைக்காரர் இத்தகைய சிறுவர்களின் பாதங்களில் புதிய பூட்ஸுகளால் ஏற்பட்ட புண்களை ஆற்றுவதற்கு - ஏதோ ஒரு ஜாதி மருந்து தனது கடையில் நன்றாக விலை போய்க் கொண்டிருக்கிறது என்கிறார்.

புலிகள் இயக்கத்தில் அண்மையில் சேர்ந்துவிட்ட தனது 13 வயது மகனைப் பற்றி வெறுப்போடு பேசிக் கொண்டிருந்த அவர் சில புலிகள் வந்ததும் திடீரென பேச்சை நிறுத்திக் - கொண்டுவிட்டார்.

நாங்கள் பேசுவது கேட்காத ஒரு 40 யார் தூரத்தைத் தாண்டி புலிகள் போய்விட்டதும் அவர் என் கைகளை குலுக்கிவிட்டு "மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றார்.

ராஜனியின் பணிகளைத் துணிச்சலோடு கூடிய சிலர் இன்றும் தொடர்கிறார்கள். ஆனால் அவர்களோடு கதைப்பது என்பது மிகவும் ரகசியமாகவே மேற்கொள்ளப்படுகிறது.

வீதிகளைக் கடக்கும் அநாமதேய நபர்களின் சமிக்ஞைகளைப் புரிந்துகொண்டு, முன்னரே தீர்மானிக்கப்பட்ட இடங்களில்தான் இச் சந்திப்புகள் நிகழ்கின்றன.

"தியாகம், துரோகம் என்ற பதங்கள் புலிகளின் அகராதியின் மந்திர உச்சாடனங்கள். அதிகாரத்தில் இருக்கும் இவர்களின் அரசியல் துப்பாக்கிக்-குழலிலிருந்து பிறப்பது நிறுத்தப்படும்வரை மக்களுக்கு அமைதியோ, நன்மையோ ஒருநாளும் ஏற்படப் போவதில்லை. நாங்கள் இப்போது ஒரு சீரழிந்த அரசியலுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். யாரும் கேள்வி எழுப்பினால் அவன் விடுதலைத் துரோகி என்று எங்களின் எதிர்காலத் தலைமுறைக்குப் போதிக்கப்படுகிறது.

கேள்விக்கிடமில்லாத பூரணவிசுவாசம் அதற்கேயுரிய விசேஷ பலத்தைக் கொண்டுள்ளது என்பதுதான் இன்றைய கோட்பாடு.

இதை உறுதிப்படுத்துவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போல 'செய்து காட்டுகிறேன் பார்' பாணியில் பச்சைப்

பாலகர்கள் அணி திரட்டப்படுகிறார்கள்" என்று விசனிக்கிறார் ஒருவர்.

ஏற்கெனவே புலிகளால் எச்சரிக்கப்பட்டிருக்கும் இவரின் பேச்சு புலிகளின் பாஷையில் 'தேசத் துரோகத்தை' (?) வெளிப்படுத்துவதுபோல் படுகிறது.

தற்போதைக்கு "யார் ராஜனி திரணகமவைக் கொலை செய்தது?" என்ற கேள்விக்கு இத்தகைய நபர்களின் சிறு குழு உயிர் கொடுத்துக் கொண்டிருக்கும் என்று தோன்றுகிறது.

ஆனால் யாழ் றோமன் கத்தோலிக்க திருச்சபையின் மேற்றிராணியார் அதி வணக்கத்திற்குரிய தியோகுப்பிள்ளை போன்றவர்கள் கூட மௌனத்தைக் கடைப்பிடிக்கும் இன்றைய சூழலில் மேலே குறிப்பிட்ட சிறு குழுவினரின் குரல் மெலிந்து போய்தான் ஒலிக்கிறது.

"இந்தியாவோ யாரோதான் இக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்கிறார்கள். ராஜனி எதையும் ஒளிவு, மறைவில்லாமல் மனதில் பட்டதை தைரியமாய் சொல்கின்ற பெண். இதைப் பற்றி முறைப்பாடு செய்வதில் ஒரு பிரயோசனமும் இல்லை. அதனால் ஒன்றும் ஆகப் போவதில்லை. இது சனங்களுக்கும் தெரியும்" என்கிறார் ஒன்றரை இலட்சம் மக்களின் ஆத்மீக மேய்ப்பரான அதி வண. தியோகுப்பிள்ளை அவர்கள்.

ஆனால் அவருடைய சொந்த அபிப்பிராயம் தான் என்ன?

"எனக்கு ஒரு அபிப்பிராயமும் இல்லை. எந்த அபிப்பிராயமும் இல்லாமல் இருப்பதே நல்லது. நீங்கள் தேநீரைக் குடியுங்கள். ஆறிவிடப் போகிறது" என்கிறார் அதி. வண. தியோகுப்பிள்ளை.

இருள் பரவியதும் கனத்த அளவில்லாத பூட்ஸுகளோடும், இராணுவக் களைப்போடும் சிறுவர்கள் மட்டுமே வீதிகளில் இறங்கத் துணிகிறார்கள்.

இடுப்புகளைச் சுற்றிக் கிற னைட்டுகளைக் கட்டிக்கொண்டும் மெலிந்த கரங்களில் கனத்த ரைபிள்களைத் தூக்கிய வண்ணமும் இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் மகுடியின் பின்னால் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் புரட்சி செய்வதெல்லாம் ஒவ்வொரு பையனுடைய கழுத்தைச் சுற்றியும் ஒரு சயனைட் குப்பியைக் கட்டித் தூக்கியதுதான்.

இந்த விடுதலை யுத்தத்தில் காட்ட முடிந்ததெல்லாம் சுவரொட்டியில் காணப்படும் அந்த இளம்பெண் ஒரு எதிரி என்பதைத்தானா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாலைவனத்தில் அகதிகள்

இதுவரை வேலையின் நிமித்தம் குவைத்திலோ, ஈராக்கிலோ இருந்த ஆசிய நாடுகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் கையில் காசுமில்லாமல், அடுத்து என்ன நடக்கும் என்பதும் தெரியாமல், எதுவித வழியுமின்றி, ஜோர்தானின் பாலைவன மணற்காட்டில் பரிதவிக்கின்றனர்.

மூன்ருல் உலக நாடுகளின் இந்த இரண்டாந்தர மனிதர்கள் –(ஆம்! ஐரோப்பியர்கள் தத்தம் தூதவராலயங்களின் முயற்சியினுல் தங்கள் நாட்டு மக்களின் ஒரு பகுதியினரை அழைத்துவந்துவிட்டனர். இன்னும் கூட தமது மக்களின் நலன்களைப்பற்றியே பேசிக் கொண்டிருக்கின்ருர்கள்.)– நீரின்றி, உணவின்றி, இருப்பிடமின்றி தத்தளிக்கின்றனர்.

இவர்களில் இலங்கையர்களும் அடங்குகின்றனர்.

ஈராக்கிற்கு உதவியளிக்க முன்வந்த(!)வந்த இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் நடுபாலைவனத்தில் இறந்து கொண்டிருக்கும் தம்நாட்டு மக்களை பற்றி அக்கறையீனமாக இருப்பது ஆச்சரியப்படுவதற்கான ஒன்றல்ல.

நாமறிவோம் இந்த அரசுகளை! தங்கள் நாட்டிலேயே மக்களை அவர்கள் எப்படி வைத்திருக்கிருர்கள் என்பதை!!

கைவிடப்பட்டுள்ள இந்த பாலைவன அகதிகளின் நிலைமையை அறிவதற்காக மேற்குஜேர்மெனியில் வெளியாகும் 'ரத்ஸ்' என்ற தினசரிப் பத்திரிகையில் வெளியான பேட்டியொன்றின்சில பகுதிகள் இங்கே. ஜோர்தான் பாலைவனக் கிராமமான ரூவசெட் எனும் இடத்திற்கு கிட்டவாக, ஈராக் எல்லையில் இருந்து சுமார் 70 கிலோமீட்டர்

## உலகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தூரத்தில் அமைந்திருக்கும் "சா அலான்–இரண்டு" என்ற முகாமில் தங்கியிருக்கும் ஒருசில இலங்கையர்களிடமிருந்து இப்பேட்டி எடுக்கப்பட்டது.

நிருபர்: இங்குவரமுதல் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

1ஆம்அகதி:

நான் குவைத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சில் வேலை செய்தேன். நாளொன்றுக்குப் பத்து மணித்தியால வேலை. ஒரு மாதம் 30 குவைத் டொலர் சம்பளம். அங்குள்ள வதிவிட முகாமொன்றில் நாலுபேருக்கான ஒரு அறையில் வசித்தேன்.

நிருபர்: இந்த முகாமுக்கு எப்போது வந்தீர்கள்?

1ஆம் அகதி:

28ஆம் திகதி ஒகஸ்ட்டில். எங்கள் வேலையிடத்தைச் சேர்ந்த பஸ் மூலம்.

நிருபர்: ஏன் குவைத்தை விட்டு வெளிக்கிட்டீர்கள்?

1ஆம் அகதி:

அங்கே சாப்பிட ஒன்றுமில்லை. சில நாட்களில் குடிப்பதற்குத் தண்ணீரே இல்லை. எங்களிடமும் காசும் ஒரு சதமுமில்லை.

நிருபர்: நீங்கள் இலங்கைக்குத் திரும்பிப் போகப் – போகிறீர்களா?

1ஆம் அகதி:

இல்லை. அங்கு சண்டை நடக்கிறது. அது மயான பூமி.

நிருபர்: அப்போ எங்கு போகப் போகிறீர்கள்?

1ஆம் அகதி:

சிலவேளை வேறு ஏதாவது நாட்டிற்கு.

நிருபர்: அங்கு போவதற்குக் காசு இருக்கிறதா?

1ஆம் அகதி:

அதிகம் இல்லை. பத்தோ, இருபது டொலர் இருக்கிறது. வேறு நாடுகளில் இருக்கும் எமது சிநேகிதர்களுக்கு போன் பண்ணினல் காசு அனுப்புவார்கள் என்று நினைக்கின்றோம்.

நிருபர்: நீங்கள் இங்கிருந்து எப்போ போகலாம்? யாராவது இது பற்றி அறிவித்தார்களா?

1ஆம் அகதி:

இல்லை. எப்போது போவோம் எனத் தெரியவில்லை.

நிருபர்: ஆட்கள் இங்கு வந்து, பின்னர் இங்கிருந்து புறப்படுவதை அல்லது அனுப்பிவைப்பதை ஒழுங்குபடுத்த ஏதாவது முறை இருக்கின்றதா?

1ஆம் அகதி:

ஆட்களை இங்கே கொண்டுவந்து விடுகிறார்கள். இங்கிருந்து எப்

www.tamilarangam.net



போது வெளியேறலாம் என்பது ஒருவருக்குந் தெரியாது.

நிருபர்: நீங்கள் எங்காவது இங்கே பதிவு செய்தீர்களா?

1ஆம் அகதி:

எங்கள் பெயர்களைக் கொடுத்துள்ளோம்.

2ஆம் அகதி:

நாங்கள் எங்கள் பொருட்களை ஈராக்கியரிடம் விற்றுத்தான் - பஸ் காசு கொடுத்தோம். செஞ்சிலுவைச் சங்கம் எமக்கு உதவுகின்றது. ஆனல் ஒரு நாளைக்கு ஒருநேரச் சாப்பாடுதான். மத்தியானமும், இரவும் பட்டினி.

நிருபர்: குவைத் மக்களோடு உங்களுக்குத் தொடர்புகள் உண்டா?

3ஆம் அகதி:

எனக்கு அவர்களோடு எவ்வித பரிச்சயமும் இல்லை. நான் எனது அம்மாவுடனும், அக்காவுடனும் குவைத்தில் இருந்தேன். இப்போ எல்லோரும் இங்கே ஒரு கூடாரத்தில் இருக்கிறோம். இக் கூடாரத்தில் மொத்தம் 40 பேர். நிலத்தில் பிளாஸ்ரிக் பாய் விரித்துப் படுக்கின்றோம். போர்வை எதுவும் இல்லை. போட்டிருக்கும் உடுப்புகளுடனேயே படுத்துக் - கொள்கிறோம். புடுப்பதும் சரியான கஸ்டம். கழே ஒரே கல்

www.tamilarangam.net

பகல் முழுக்க சூரியான அனல் வெக்கை.

4ஆம் அகதி:

குவைத்தில் ஒரே இடத்தில்நான் வேலை செய்த ஆட்களுடனேயே இங்கேயும் ஒரு கூடாரத்தில் இருக்கிறேன். எல்லோரும் ஒன்ருகவே இங்கே வந்தோம்.

3ஆம் அகதி:

எங்களுக்கு 2 மாதச் சம்பளம் இன்னும் தரவில்லை. வங்கிகளும் பூட்டு. தனிய பாஸ்போட்டுகளை மட்டும் திருப்பித் தந்துவிட்டார்கள்.

நிருபர்: உங்களிடம் ரிக்கற் — வாங்கப் பணம் இருக்கிறதா?

3ஆம் அகதி:

இல்லை. எங்களிடம் காசில்லை. தூதுவராலயம் எங்களுக்கு உதவும் என்று நினைத்தோம். அங்கிருந்து அப்படி ஒருவரும் இன்னும் வரவில்லை. சிலவேளை ஏதாவது கப்பல் அனுப்புவார்கள் என்று எதிர்பார்த்தோம். அதுவும் நடக்கவில்லை. இங்கே இன்னும் எவ்வளவு நாள் இருக்கவேண்டுமோ தெரியவில்லை. ஜோர்டான் எங்களை இங்கிருந்து அம்மான் — போக அனுமதிக்கவில்லை. இங்கிருந்து போய்விடுவதற்குச் சிலர் முயற்சித்தும் திருப்பிக்கொண்டுவந்து இங்கேயே விட்டுவிட்டார்கள்.

நிருபர்: உங்கள் உடல் நிலை எவ்வாறு இருக்கிறது?

பலர் ஒரே தடவையில்:

எல்லோருக்கும் சுகமில்லை. தண்ணீர் இல்லை. ஒரு போத்தல் தண்ணீருக்கே அதிகநேரம் கியூவில் நிற்கவேணும். யாருக்காவது கடும் சுகவீனம் என்ருல் மட்டும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகிருர்கள்.

4ஆம் அகதி:

யாருக்குத் தெரியும், சிலவேளை நான் இங்கேயே சாக வேண்டி வந்தாலும் வரும். முதல் வேறு முகாமுக்கு மாற்றப்பட்டோம். அங்கு இதைவிட மோசம். கக்கூசும் இல்லை. தண்ணியும் இல்லை ஒரே ஊத்தை. மணல் எழும்பினுல் ஒரே மணலும், தூசியும்தான். அங்கு கூடாரம் இல்லை. இரண்டு நாளைக்குப் பிறகுதான் இங்கு கொண்டுவரப்பட்டோம்.

தமது தாய் நாடுகளின் அரசியல், பொருளாதார அமைப்பினுல் மத்திய கிழக்கு நாடுகளில் தமது உடல் உழைப்பை விற்றுக்கொண்டிருந்த இந்த உழைப்பாளர்கள் ஏகாதிபத்தியங்களுக்கும், சர்வாதிகாரங்களுக்குமான மோதலில் பாதிக்கப்பட்டு, யாராலும் எவ்விதத்திலும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாது பாலைவனத்தில் பட்டினியுடன் தங்கள் சாவை எதிர்நோக்கியிருக்கிருர்கள்.

ஏனெனில் அவர்கள் மூன்ரும் உலகத்தைச் சேர்ந்தவர்கள்.

இதுதான் இன்றைய உலகம்.

— ந/சு.கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தேசத்தின்...." (தொடர்ச்சி)

அவையளுக்குப் புலிக்கு எதிராக யுத்தம் செய்வதாகக் காட்டிக் கொண்டு தமிழ் மக்களின்ரை உரிமையளை நசுக்கிறதுதான் - நோக்கம். அது ஏற்கெனவே வெளிப்படையானது. இந்தக் கட்சியள் - முந்தின இயக்கங்கள்- புலியளுக்கு எதிரா தாங்கள் சண்டைப்படேலையே? இந்தியாவோடை சேர்ந்துகொண்டு துரோக வேலை எல்லோ செய்தவை? அதாலை அவையள் மக்களின்ரை நலனுக்கு எதிராகச் செயற்பட்டினம் எண்டுதான் - சொல்ல வேண்டியிருக்கு. இந்தியா தன்ரை ஒப்பந்தத்தை திணிக்கத்தானே சண்டை போட்டது. அது தமிழ் மக்களை தங்கடை விடுதலைப் போராட்டத்தைக் கைவிடச் சொல்லிக் கேக்கிற ஒப்பந்தந்தானே! இப்ப இலங்கை அரசும் அதைத்தான் செய்யுது. ஆக இரண்டினதும் யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது. அதைப் புலியள் எதிர்க்கிறபடியால் அவங்களுடன் மக்களின்ரை நலன்களும் சேர்ந்திருக்குது எண்டு சொல்லுறன்"

"அப்ப இப்ப நீ சொல்லுறது என்ன?"

"இந்த இயக்கங்கள் ஒரு காலமும் புலியளுக்குப் பதிலாக முடியாது. புலியளின்ரை சனநாயக விரோதக் குணம் இவையிட்டயும் இருக்கு. அது இந்தியப்படை இருக்கேக்கை வடிவாய் தெரிஞ்சிது. அதோடை எதிரி மக்களோடை யுத்தம் செய்யேக்கை கூட நிக்கிற துரோகத்தனமும் இருக்குது. இது இரண்டும் இருக்குமவரை இவையளாலை புலியை வெல்லவும் ஏலாது - அரசியல் ரீதியாக. உண்மையாக அக்கறை இருந்தால் இலங்கை அரசாங்கத்தின்ரை திட்டத்தை அம்பலப்படுத்த போராட வேணும். அதைச் செய்யாமல் இவை எதையும் சாதிக்கப் போறதில்லை. பாரன் 3ஆம் திகதி என்ன கதைக்கினம் எண்டு"

நாலாம் திகதி சந்திப்பதாகச் சொல்லிவிட்டு நான் வந்தேன்.

நண்பருடன் கதைக்கும் - போது எனக்கு உடனடியாக ஏற்படுவது குழப்பந்தான். ஆனால் நிதானமாக யோசித்துப் பார்க்கையில் நிலைமைகளை எவ்வளவு சரியாக எடைபோடுகிறார் என்று வியப்பாக இருக்கும்.

இந்த இயக்கங்கள் ஒன்றும் புலிகளுக்குப் பதிலாக இருக்க முடியாது என்றது உண்மை- தான். புலியள் செய்த அதே 'பாசிச' செயல்களை இவர்களும் தமது 'ஆட்சிக்' காலத்தில் செய்துதான் வந்திருக்கிறார்கள்.

ஆசன வாயிலினுள் சோடாப் போத்தலைச் செலுத்துவதில் புகழ் பெற்றவர்களுக்கு, போராளிகளின் உடல்களை 'பி' காம்பில் வைத்து துண்டு துண்டாக அறுத்து, வறுத்தவர்களுக்கு, இந்திய இராணுவம் பெண்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலியல் பலாத்காரம் செய்யும்போது பாத்து ரசித்தவர்களுக்கு மக்களின் நலனில் அக்கறை இருக்கும் என எதிர்பார்க்க முடியுமா என்ன?

எனக்கு இப்போது இந்தப் பிரச்சினை தொடர்பாக –இவர்களின் அரசுடனை பேச்சு தொடர்பாக பேசுவதில் அர்த்தமில்லை என்று தோன்றுகிறது.

உண்மையில் நாங்கள் – யோசிக்க வேண்டிய விசயம் இதுவல்ல. இந்த தமிழீழ மக்களது பிரச்சினையை எப்பிடித் தீர்க்கப் போகிறோம் என்ற பிரச்சினைதான் என்று படுகிறது.

நாலாம் திகதி நண்பரை சந்திக்கும்போது இது பற்றிப் பேசவேண்டும் என முடிவு செய்துகொண்டேன்.

. . . . . . . . . . . . . . . . . . . . . . .

சொல்லி வைத்தபடி நாலாம் திகதி நண்பரைச் சந்திக்க முடியவில்லை. காரணம் கூட விசேசமானது. நீங்கள் அதையும் அறிந்துகொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த எனது நண்பர் ஒருவர் எப்படியோ கஸ்டப்பட்டு மூன்று பத்திரிகையின் 6 இதழ்களைக் கொண்டு வந்திருந்தார்.

அவருடன் பேசிக் கொண்டிருந்ததில் அன்றைய பொழுது போய்விட்டது.

அவர் கொண்டுவந்த பத்திரிகைகள்: ஈழநாதம்–2, உதயன்–2, முரசொலி–2.

இந்தப் பத்திரிகைகளை வாங்கிப் படித்தபோது முதலில் எனது கண்ணில் உறுத்தியது ஈழநாதம் தவிர்ந்த வேறெந்தப் பத்திரிகைகளிலும் ஆசிரிய தலையங்கம் எழுதப்பட்டிருக்கவில்லை என்பதே.

உதயன், முரசொலி இரண்டும் முழுக்க முழுக்க செய்திகளினாலேயே நிரப்பப்பட்டிருந்தது. வழமையான தாக்குதல், வீரமரணம், அகதிகள் கஸ்டம், மருந்துத் தட்டுப்பாடு, சாப்பாட்டுப் பஞ்சம் என்பவற்றுடன் இன்னும் இரண்டு விசயங்கள் கவனத்தை ஈர்த்தன.

அவற்றில் ஒன்று தமிழீழவிடுதலைப் புலிகளின் பிரமுகர்களில் ஒருவர் ஆக்கிரமிப்புக்கு எதிராக மக்கள் இரத்தம் சிந்திப் போராடவேண்டிய இத்தகையதொரு சூழலில் கொழும்புக்கும் இந்தியாவுக்கும், வெளிநாட்டுக்கும் செல்பவர்கள் துரோகிகள் எனக் கூறியதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதை அடியொற்றி இதே கருத்துப்பட ஈழநாதம் ஆசிரிய தலையங்கமும் எழுதியிருந்தது.

இதில் இருந்த இன்னொரு செய்தி: அல்லைப்பிட்டியில் புதிதாக இராணுவத்தால் அலுமினியத் தொழிற்சாலையில் போடப்பட்டிருக்கும் இராணுவ முகாமிலிருந்து வீசப்பட்ட செல் ஒன்று குருநகரில் வீழ்ந்து வெடித்ததில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இளம்புலி ஒருவர் வீரமரணமடைந்தார் என்பது.

இந்த இரண்டு செய்திகளும் புலிகளின் தற்போதைய நிலைப்பாட்டை எனக்கு ஓரளவு தெளிவுபடுத்தின.

மக்களது நிலை எப்படி இருக்கிறது என்பதற்கு ஒரு சிறு செய்தி நல்ல விளக்கமாக இருக்கும் என்று நினைக்கிறேன்:

வீரபத்திரர் கோவிலினுள் புகுந்த திருடன் ஒருவன் அங்கிருந்த பெறுமதியான பொருட்களை எதுவும் செய்யாமல், அங்கிருந்த 2 கிலோ எடையுள்ள பச்சை அரிசியை மட்டும் திருடி சென்றுள்ளான்.

இவற்றைப் படித்தபோது எனக்குத் தோன்றியதெல்லாம் இதுதான்:

யுத்தம் மக்களை மிகவும் மோசமாகப் பாதித்துவருகிறது பசிக் கொடுமை அவர்களைத் திருடவும் தூண்டி வருகிறது. யுத்தத்தினும், பசியாலும், அடிப்படை வசதிக் குறைவாலும் பாதிக்கப்படுகிற மக்கள் அங்கிருந்து

தப்ப தம்மாலியன்றதை முயல்கிறார்கள். கொழும்புக்கோ, இந்தியாவுக்கோ ஓட முயல்கிறார்கள்

அரசின் குண்டுகளாலும், துப்பாக்கிச் சன்னங்களினும் சாகடிக்கப்படுகிற மக்களின் இறப்புகள் அர்த்தமற்ற சாவுகளாகி வருகின்றன. அவர்களது மரணங்கள் யுத்தத்தின் 'தவிர்க்கவியலா' விளைவுகளாகிவிடுகின்றன.

இத்தகைய 'தவிர்க்கவியலா' விளைவுகள் காரணமாக இறக்கும் புலிகள் வீர மரணத் தியாகிகளாகப் போற்றப்படுகிறார்கள்.

புலிகளைப் பற்றிய, போராட்டம் பற்றிய திறந்த கருத்துகளுக்கு தடை நிலவுகிறது. பத்திரிகைகள் செய்திச் 'சுருள்'களாக சீவனற்று வெளிவருகின்றன

இந்தச் சூழலிலிருந்து வெளியேற நினைக்கிற மக்கள் 'துரோகிகளாக' முத்திரை குத்தப்படுகிறார்கள்...

நான் அந்த நண்பரிடம் பேச்சுக் கொடுத்ததில் அவர் தந்த தகவல்கள்:

"பொதுவாக எல்லா இடங்களிலும் குண்டுகள் பொழியப்பட்டுள்ளன. இரவு வேளையில் இரண்டு முதல் ஒன்பது வரையான குண்டுவீச்சு விமானங்கள் பறந்து வந்து குண்டு போடுகின்றன.

இரவு நேரங்களில் ஆஸ்பத்திரிகள் என அடையாளம் காட்ட அவற்றைச் சுற்றி பழைய ரயர்கள் எரிக்கப்படுகின்றன. ரயர்களுக்குக்கூடத் தட்டுப்பாடு நிலவுகிறது.

அங்கு வாழும் ஒவ்வொருவருக்கும் வாழ்வில், தமது எதிர்காலத்தில் நம்பிக்கை போய்விட்டது. வெளியேற முடிந்தவர்கள் மட்டும் வெளியேறுகிறார்கள்.

வெளியேறுபவர்களை புலிகள் துரோகிகள் என்று சொல்வதில் நியாயம் இல்லை. அவர்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளிடம் பாஸ் எடுக்க நாட்களுக்காக கியூவில் நிற்கவேண்டும். முழுமையாக ஒருவர் பற்றிய விபரங்களை அறிந்த பின்னரே அவர்கள் பாஸ் தருகிறார்கள்.

மொத்தமாக 1000 ரூபாவை கொடுத்த பின்னரே வவுனியா வரவேண்டியுள்ளது. அதற்கிடையிலும் புலிகளால் மிகவும் கவனமாகச் சோதிக்கப்படுகின்றோம். நாம் எப்படித் துரோகிகளாக முடியும்?

கொழும்பை மையமாக வைத்து எமது நிலைமைகள் இருக்கின்றன. இவ்வளவு பிரச்சினைக்குள்ளும் உணவும், மருந்தும் கொழும்பிலிருந்துதான் வருகின்றன. வரவேண்டியுள்ளது. அத்தியாவசியத் தேவைகளுக்கு ஒரு மண்ணும் இல்லாமல் துரோகிகள் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

அரசு எங்களை மக்களாக மதிக்கவில்லை. புலிகளாவது ஆகக் குறைந்தது துரோகிகளாக ஆவது மதிக்கிறார்கள் என்ற நாம் திருப்திப்படுகிறோம்!

நாங்கள் புலிகளுக்கு எதிரில்லை. ஆனால் அவர்களுடன் சேர்வதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

எனக்கு உயிர் போனாலும் அவர்களைக் காட்டிக் கொடுக்க மாட்டேன். ஏனென்றால் அவர்களைவிட மோசமானது இலங்கையரசாங்கம்.

ஆனால் புலிகளுடன் சேர என்னால் முடியவில்லை. ஒரு 'கேள்விமுறை' இல்லாமல் கொலைகள் செய்வதும், பொய்க் காரணங்கள் காட்டுவதும், நினைத்தபோது துரோகி, நினைத்தபோது எதிரி நினைத்தபோது நண்பன் என்றும் தடுமாறுகிற அரசியல் இயக்க முறையை எனக்குப் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

2 பவுண் கேட்டார்கள். குடுத்தோம். குடுக்காமல் விட்டிருக்க முடியாது!! ஆனால் இது எமக்கு? ஏதாவது பயனுள்ள விடுதலைக்குப் போகுமா என் சந்தேகம் எனக்கு இருக்கவே செய்கிறது.

புலிகளுக்குப் 'போராட' தெரிந்தளவிற்கு மக்களை மதிக்கத் தெரியவில்லை. மக்களை அவர்கள் செம்மறிகள் போல் நடத்துகிறார்கள். செம்மறிகள் எப்படி பாதுகாப்பு உணர்வுடன் புலிகளுடன் கூட்டுச் சேரமுடியும்?"

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த இந்த நண்பரின் இந்தப்பேச்சுகள் எனக்குப் பல விசயங்களில் தெளிவை ஏற்படுத்துவது போல் படுகிறது. எமது போராட்டம் எங்கே போய் முட்டப் போகிறது என்ற பயமும் இதற்கு மாற்று வழி என்னஎன்ற கேள்வியும் என்னுள் எழுகின்றன.

இவை பற்றி நானும் எனது நண்பரும் பேசிய விசயங்களை அடுத்த தடவை பார்ப்போம். உங்களுக்கு ஒரு சிறிய 'க்ளூ' தருகிறேன். நீங்களும் யோசித்துப் பாருங்கள். உங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்துகளையும் இலங்கையிலிருக்கும் பிரசைகளாகிய நாங்கள் அறிந்துகொள்ளலாமா...?

* எமது போராட்டம் இப்போது இந்த நிலைக்கு வந்திருப்பதற்கு காரணம் என்ன?
* இந்நிலை தேக்கமானதா ? அல்லது ஆரோக்கியமானதா? இதைத் தவிர்திருக்க முடியாதா?
* புலிகளை இந்த யுத்தகாலத்தில் எதிர்ப்பது பிழை எனச் சொல்வது சரியா?
* அல்லது புலியை எதிர்க்காமல் எமது போராட்டம் வளராது என்று சொல்வது சரியா?



## வாசகர் கடிதங்கள்

எமது நாட்டில் பதவி மோகம் பிடித்து, நல்லவர்கள் போல் நடித்து, மக்களை அழிவுப் பாதையில் இட்டுச் செல்பவர்களின் அநியாயங்களையும், அராஜகங்களையும் இங்குள்ள மக்கள் அறிய தூண்டில் மூலம் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. முற்போக்குச் சக்திகளை அழித்துவிட்டு தாம்தாம் முற்போக்கு சக்திகள் என்று பகல் வேஷம் போடுபவர்களை விமர்சனம் செய்வதில் எந்தத் தவறுமில்லை எந்தத் தவறையும் சுட்டிக் காட்டுவதற்குப் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் முழு உரிமையுமுண்டு. தூண்டிலில் வரும் ஆக்கங்களையும், கருத்துகளையும் வரவேற்கிறேன்.

.....                பி. கே

தூண்டில் இங்கே தோற்றுப் போய்விடும் போல் தெரிகிறது. உங்களுக்குக் கிடைக்கும் தகவல்கள் பொய்யாகவும் இருக்கலாம்.

இலங்கை                ......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'யாருக்காக இந்த யுத்தம்' பிரசுரிக்கப்படுவது நல்ல விடயம். 'கொலை' சிறுகதை ஒரே கொலை. சுத்த அறுவை. மேலும் ஆனந்தவிகடன், குமுதம்... போன்றவற்றில் இருந்து எடுக்கப்பட்ட கேலிச் சித்திரங்கள் அவ்வளவு பொருத்தமானவையாகப்படவில்லை. ஒரு சில நிரந்தரமான பாத்திரங்களை உருவாக்கினால் என்ன?

..... கே. காந்தன்

'நடுநிலை' என்றில்லாமல் தூண்டில் வெளிவருவதையிட்டு நான் சந்தோசம் கொள்வதோடு, தூண்டிலில் சாதாரணமாக பத்திரிகைகளில் இருந்து அதிகமாக எடுக்கப்பட்டு, மீள் பிரசுரிப்பு செய்யப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. உதாரணம்: வீரகேசரி. இப்படியான விடயங்களை மிகவும் குறைத்து புதிய கருத்துகளையும், புதிய எழுத்தாளர்களையும் தூண்டில் மூலம் காணத் துடிக்கிறேன்.

..... எல். கே. நாதன்

இலங்கையிலிருக்கும் எம்மவர்கள் பற்றிய எந்த நிலைமையையும் அறிய முடியாத இந்தச் சூழ்நிலையில் உங்கள் செய்திகள் மூலம் இலங்கையின் நிலவரங்களையும், தமிழினத்தின் நிலைமையையும் ஓரளவுக்காவது அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தொடர்ந்தும் இலங்கைச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நடுநிலைமையுடன் எழுதுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

..... ச. தயாபரன்

இடமின்மையால் 'கேள்வி-பதில்', தொடர்கதை என்பன சென்ற கலத்திலும், இக் கலத்திலும் இடம் பெறவில்லை. அடுத்த கலத்தில் இவை இடம்பெறக் கூடும்- இடமிருக்குமாயின் !!!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பலி எடுக்கும் நிறவெறி

சுவிஸ் நாட்டில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் வேகமாக அதிகரித்து வருவதைப் பற்றி பத்திரிகைகள் வெளிக்கொணர்ந்திருக்கின்றன.

கடந்த 2 வருடங்களாக இந் நடவடிக்கைகள் கொடூர-மான தாக்குதல்களாக வளர்ச்சியடைந்துள்ளன. இத் தாக்குதல்களில் பல வெளிநாட்டவர்களுடன் தமிழர்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1987ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் லங்கன்தால் எனும் இடத்தில் வசித்த தமிழர்கள் கடைகளுக்குப் போகும் வழியில் நிறவெறியர்களால் தாக்கப்பட்டு வந்தார்கள்.பின்னர் இந்த இடம் நிறவெறியர்களின் நிரந்தர சந்திப்பு மையமாகவே மாறிவிட்டது.

1987இன் இறுதிப் பகுதிகளிலே கூ.கூ.கிளான்ஸ் மனியர் என்ற நிறவெறிக் கும்பலினால் அகதிகளின் விடுதிகள் தாக்கப்பட்டன. இவ்விடுதிகளுக்குத் தீ வைக்கப்பட்டதுடன் அடித்துடைக்கப்பட்டு உடைமைகளும் சேதமாக்கப்பட்டன.

குளொஸ்ரர், சற்டோவ், வெர்னுமிகே, பகென்புலக், ஸொலிக்கொன், சூர், றிக்ரெர்ஸ் வில் போன்ற இடங்களில் உள்ள அகதிகள் விடுதிகள் தீக்கிரையாக்கபட்டதில் உள்ளடங்குகின்றன.

இவற்றில் பல திட்டமிட்ட சதியென்றும், ஏனையவை இன்னும் என்ன நடந்தது என்று தெரியாமலும் ( ! ) இருக்கின்றன.

1989 யூலை 2ம் திகதி சூர் எனும் நகரத்திலுள்ள தமிழ் அகதிகள் தங்கியிருந்த விடுதிக்கு இனவெறியர்கள் தீவைத்த சம்பவமே பயங்கரமானது. இக்கொடூரச் சம்பவத்தில் 4 தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். கொல்லப்பட்டவர்களில் 2 குழந்தைகளும் அடங்குவர்.

மீண்டும் செப்ரெம்பர் – மாதம் 30ஆம் திகதி பெக்கென்றைட எனும் நகரிலுள்ள அகதிகள் விடுதியொன்று நாஸிகளின் வெடிகுண்டு தாக்குதலுக்கு இரையானது.

இதனையடுத்து ஒரு மாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த்தின் பின்னர் பற்றியோசிசன்-புறென்ற் எனும் புதிய நாஸிக் குழு ஸ்ரைன்கௌஸன் என்ற நகரிலுள்ள தமிழ் அகதிகளின் விடுதியைத் தாக்கியது. அம் முகாமிலிருந்த சுவிஸ் நாட்டவரான சமூக சேவையாளரும் நாஸிக் குழுவினரால் நையப்புடைக்கப்பட்டார். தளபாடங்கள், உடைமைகள் சேதமாக்கப்பட்டன.

அகதிகளின் விடுதிகளைத் தாக்கிவந்த நிறவெறிக் கும்பல்கள் பின்னர் தனித்தனி நபர்களின் மேல் தங்கள் வெறித்தனத்தைக் காட்டினர்.

## குணபாலன்

சென்ற வருடம் நவம்பர் மாதம் 26ஆம் திகதி பிறைபேக் நகரில் வசித்த 44 வயது துருக்கியர் ஒருவர் புதிய நாஸி குழுவைச் சேர்ந்த 17 வயது மாணவனால் கொலை செய்யப்பட்டார்.

இந்த வருடம் யூன்மாதம் 5ஆம் திகதி ரேசக் எனும் இடத்தில் 3 பங்களாதேசிகள் நிறவெறியர்களால் சுடப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இவற்றின் உச்சக்கட்டமாக சூரிச்சில் 20.07.90அன்று 25 வயதுடைய தமிழ் அகதி ஒருவர் 37வயதுடைய நிறவெறியனால் தாக்கப்பட்டு படுகாயங்களுக்குள்ளாகி ஒரு சில மணித்தியாலங்களின் பின் மரணமானார். (இக் கொலைக்கு நிறவெறி காரணமல்லவென்றும் தனி நபர் தாக்குதலே என்றும், வேறு சில காரணங்களும் கூட தெரிவிக்கப்படுகின்றன.)

இத் தமிழருடன் சேர்த்து கடந்த மாதம் மட்டும் 6 அகதிகள் இனவெறிபிடித்த நாஸிகளால் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இக் கும்பல்களுக்குச் சார்பாக பொலிசாரும், வலதுசாரிகளும், பெரும்பாலான பொதுசனதொடர்பு சாதனங்களும் இயங்கிக்கொண்டிருப்பதானது சுவிஸிலிருக்கும் வெளிநாட்டவர்களுக்கெதிரான வெறியை வளர்த்துக் கொண்டிருப்பதுடன், நாஸிகளுக்கு பலத்தையும் வழங்கிக் கொண்டிருக்கிறது.



www.tamilarangam.net

# அவ்வூரம் மக்களிடம் இருந்து...

# ஓர் வேண்டுகோள்!

**இலங்கையில் அகதிகளாகியுள்ள சுமார் 220 தமிழ் மக்களால் கையெழுத்திடப்பட்டு, அனைத்து அரசியற் கட்சிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜர் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

இலங்கை வாழ் தமிழ் - பேசும் மக்களாகிய எம்மீது இன்று கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இவ் யுத்தமானது எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாததொன்றாகும்.

இன்று நடைபெறும் இக் கொடிய யுத்தத்தில் இடைநடுவே சிக்குண்டு அல்லல்படும் - பொதுமக்களாகிய நாங்கள் எமது சார்பில் குரல் கொடுக்க எவரும் அற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது மிக வேதனைப்படவேண்டியதொன்றாகும்.

எனவே வடக்கு, கிழக்கு வாழ் மக்களின் பிரதிநிதிகளாக கருதப்படும் அரசியற் கட்சிகளாகிய உங்களிடம் இவ் வேண்டுகோளை விடுக்கிறோம்.

வட, கிழக்கில் இன்று நடைபெறும் யுத்தமானது எப் பகுதியினரால் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் இன்று அதனால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் வட, கிழக்கு வாழ் பொது மக்களாகிய நாங்களேயாகும்.

யுத்தத்தின்போது இடையில் சிக்குண்டு உயிர்களை இழந்தது மட்டுமின்றி, இலட்சக் கணக்கில் அகதிகளாகவும், இளைஞர்கள் கைதிகளாகவும் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இதில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ், சிங்கள, முஸ்லீம் அனைத்து மக்களும் அடங்குகின்றனர்.

அனைத்தையும் இழந்து அகதி முகாம்களில் இருந்தும்கூட அங்கும் எமது உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையே இன்றுதோன்றியுள்ளது.

இந்த யுத்தமானது இன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சடுதியாக ஆரம்பிக்கப் பட்ட ஒன்றுகத் தென்பட்டாலும் இதன் பின்னணியானது கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலான எமது அரசியல் போராட்டத்துடன் பி ன்னிப் பிணைந்துள்ளது என்பதை யாவரும் புரிந்துகொள்ள வேண் டும்.

இன்று எமது பிரச்சினைக ள் முழுமையாக தீர்க்கப்படாத நிலைமையே காணப்படுவதால், இந்த யுத்தமானது தற்போதை க்கு முடிவுக்கு வரக்கூடியதல்ல என்பதையும் நாம் உணர வேண் டும்.

எனவே தொடர்ந்தும் நாம் அகதிகளாக்கப்படுவதும், எமது உயிர், உடைமைகளுக்கு -சேதம் விளைவதும் தொடரப்-போகின்றது என்பதையும் அனை வரும் தெளிவாகப் புரிந்துகொ ள்ளவேண்டும்.

எனவே இவ் இக்கட்டான கட்டத்தில் தமிழ் பேசும் மக் களின் பிரதிநிதிகள் என்றவகையி ல், ஜனநாயக அரசியல் வழிமுறை க்கூடாக எமது பிரச்சினைக்குத் தீர்வுகாண நம்பிக்கை கொண் டுள்ள அரசியல் கட்சிகளான உ ங்களிடம் நாம் பின்வரும் வேண் டுகோளை விடுக்கின்றோம்.

(1).

இன்று வடக்கில் நடைபெறும் யு த்தத்தால் மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவதை முன் கருத்தி ற்கொண்டு உடனடியானதொரு யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி அனைத்துத் தமிழ் கட்சிகளும் பேச்சுவார்த்தைக்கு வரக்கூடிய சூழ்நிலையை உருவாக்க நடவடி க்கை எடுக்கவும்.

(2).

யுத்தம் நடைபெற்றுக்கொண்டிரு க்கும் பகுதிகளிலும், இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட் டினுள் இருப்பதாகக் கூறப்படும் பகுதிகளில் பொதுமக்களின் உயி ர், உடைமைகளின் பாதுகாப்பிற் கு உத்தரவாதம் செய்ய நடவ டிக்கை எடுக்கவும்.

(3).

வடக்கு, கிழக்குத் தவிர்ந்த ஏ னைய பகுதிகளில் தங்கியிருக்கும் தமிழ் பேசும் மக்களின் உயிர், உடைமைகளுக்கான பாதுகாப்பி னை உத்தரவாதம் செய்ய நட வடிக்கை எடுக்கவும்.

(4).

பாதிக்கப்பட்ட பகுதிகளில் அக திகளான மக்களுக்கு எந்தவித-மான பாரபட்சமற்ற முறையில் அத்தியாவசியப் பொருட்களை உரிய நேரத்தில் கிடைப்பதற்-கான ஒழுங்குகளைச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ள வும்.

www.tamilarangam.net

நாம் மேற் குறிப்பிட்டுள்ளவைகள் எமது பிரச்சினைகளை முழுமையாகத் தீர்த்து விடாது என்பதை நாம் உணர்ந்தாலும், இன்று உடனடியான எமது பிரச்சினைகளைத் தீர்க்கும் எனநாம் நம்புகின்றோம்.


எமது அரசியல் பிரச்சினை தொடர்பாக, இலங்கையரசின் மீதோ, அவை நடத்திய பேச்சுக்கள் மீதோ, தமிழ் பேசும் மக்களின் பிரிதிநிதிகள் என்பவர்கள் மீதோ நம்பிக்கைகளை இழந்து போகும் நிலையில் இருந்தே இவ் வேண்டுகோள்களை விடுக்கின்றோம்.

வெறும் பத்திரிகை அறிக்கைகள் மாத்திரம் எமது இன்றைய பிரச்சினையான உயிர், உடைமைகளுக்கான பாதுகாப்பை உத்தரவாதம் செய்யப் போதுமானவையல்ல என்பதைக் கருத்திற்கொண்டு, உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழ் பேசும் மக்களின் சார்பில் உங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

02.07.1990



# நூல் அறிமுகம்




தொடர்புகளுக்கு
SUVADUKAL
Herslebsgare . 43
0578 Oslo . 5
Norway



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

செப்ரெம்பர் 1990 கலம் : 33

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தெள்ஞசிய நிறுவனம்

முகவரி ............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

## சந்தா விபரங்கள்

மேற்கு ஜேர்மெனி: 6 மாதங்கள் - 20,- டி.எம்
1 வருடம் - 38,- டி.எம்

சந்தா அனுப்பி வைக்க வேண்டிய வங்கி கணக்கு இல. 571 001 799
Stadt Sparkasse Dortmund
BLZ 440 501 99

ஐரோப்பிய நாடுகள்: 6 மாதங்கள் - 25,- டி.எம்
1 வருடம் - 48,- டி.எம்

ஏனைய நாடுகள்: 1 வருடம் - 45,- யு.எஸ்.டொலர்

சந்தா அனுப்பி வைக்க வேண்டிய தபால் கணக்கு இல.30807468
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

சந்தா அனுப்பியதும் அவ்விபரத்தைக் கடிதம் மூலம் எமக்கு அறிவிப்பதனல் காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போர் நிறுத்தம்!

வடக்கு, கிழக்கில் –

ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிரு கிறார்கள்.

இலட்சக்கணக்கில் பொதுமக்கள் அகதிகளாகித் தரித்து நிற் ஓரிடமுமின்றி அவலப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

உண்ண உணவின்றி மக்கள் தெருக்களில் பிச்சையெடுத்துக் கொ ண்டிருக்கிறார்கள்.

பட்டினியால் குழந்தைகள் உட்படப் பலர் உயிரிழந்து கொண் டிருக்கிறார்கள்.

தொற்றுநோய்கள் குழந்தைகள் உட்படப் பலரைப் பலியெடு த்துக்கொண்டிருக்கின்றன.

அநாதரவாக விடப்பட்டவர்கள் தப்ப வழிகளின்றி நடுக்கடலி லும், பதுங்கு குழிகளிலும், தெருக்களிலும் செத்துக் கொண்டிருக் கிறார்கள்.

கிழக்கில் –

சிறுபான்மையினங்கள் பிளவுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சிறுபான்மையினத்தின் பிரதேசங்கள் களவாடப்பட்டுக் கொண் டிருக்கின்றன.

எதிரிகளுக்கு மட்டுமே சாதகமாயிருக்கும் – இனப்படுகொலைகளை ம், இனத் தற்கொலைகளையும் உள்ளடக்கிய – இந் நிகழ்வுகளாக "யுத்தம்" உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என விரும்புபவர்க ளும், வலியுறுத்துபவர்களுடனும் – போர் நிறுத்தம் என்றால் போ ஈடுபட்டிருப்பவர்கள் தம்மை இராணுவ ரீதியில் பலப்படுத்துதல் ன்பதே எமது கடந்தகால வரலாறுகளாகும் என்பதையும், போ நிறுத்தம் என்பது முழுமையான தீர்வாக இல்லாவிடினும் இன்றை உடனடித் தேவையே என்பதையும் கருத்தில் கொண்டு – நாமு இணைந்து கொள்கின்றோம்.